# அபிராமி



ஸ்ரீ சத்குரு தூளி பாபா

# அபிராமி!

# பொருளடக்கம்


1. அபிராமி------------------------------------------------------------2
2. துஷ்டனை கண்டால் தூர விலகு--------------------------------13
3. பிறவி ரகஸ்யம்-----------------------------------------------------28
4. ஓர் உண்மை--------------------------------------------------------43
5. சம்சார விருக்ஷம்------------------------------------------------45
6. புஷ்ப தேனும் கிண்ண தேனும்--------------------------------49
7. பித்ருக்களும் சிரார்த்தமும்---------------------------------------57


எல்லாம் நீ!

உ

ஸத்யமேவ ஜயதே!!!!!

அபிராமி!

ஜனவரி முதல் தேதி!

2007!

மார்கழி 17

“திங்கள்”!



ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்!"

"ஸத்குரு திருவடி தான்"!

"நம்பினோர் கெடுவதில்லை"!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்"

"ஓம்"

"அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம்",

"அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும்",

"சிறிதும் இல்லை"!

"தெய்வம் மனுஷ்யாணம்"!!!

உ

"அபிராமி" ௨



1. நன்றே "வருகினும்",

தீயதே "விளைகினும்";

யாம் அறிவது, ஒன்றேயும் இல்லை!

என்று, ஸ்ரீ அபிராமி பட்டரும். ஓர் சிவனடியார்,
(நீ) "நன்றே செய்வாய்!" என்றும்
(யாம்) "பிழையே செய்வோம்!" என்றும்;
உண்மை உணர்வாக, பாடியருளிய ஓர் தகவல் வந்தது.
இவ்விருவருக்கிடையில், ஸ்ரீ அபிராமி பட்டர், ஓர் ஸத்திய
வாசகத்தை, இடையில் போட்டார். அதாவது:—

அன்றே, "பரம்" என "உனக்கு"!
அளித்துவிட்டோம்! என ஆணித்தரமாக, தம்
ஸ்வய அனுபவ நிலையிலும், சொல்லியிருக்கிறார். இதன்
உட்பொருளை, சற்று உணர்வீர்!

"நன்று வருகிறது!" என்றும், "தீயது!
விளைகிறது!" என்றும், பொருள்படுகிறது.
(வருகிறது என்பதைவிட அது இயல்பாக இருக்கிறது என்பதே பொருளாகும்)
அதாவது நன்மையானது, எப்போதுமே, இயல்பாகவே,
ஸாஸ்வதமாகவும், ஸத்தியமாகவும், எவரும்
விரும்பாமலும், எவரும் அதை கொடுக்காமலும், அதன்
இருப்புக்கோ, இந்நிலை காவலென, தாவம் கணிக்காத நிலையிலும்,



"மாற்றமோ" "மறைவோ"

இல்லாமலும், அந்த நன்மையானது,

"சுகமாக" சுத்த "சிவமாக"

"சும்மாவே" இருக்கிறது, என பொருள் கொள்ள வேண்டும்.

ஆனாலும் ?

"தீயது" என்ற தீமையானது, கஷ்டம், கவலை, பயம் துக்கம்

துயரம், சஞ்சலம், சந்தேகம், கலக்கம், காமங்கள், இவை

காரவிளையும்; "கலகம்" என்ற பிரச்னையானது

தோன்றுகிறது. ஆனாலும் அவை,

நிரந்தரமுமல்ல, சாஸ்வதமுமல்ல, ஸத்தியமுமல்ல! அது

அப்போதைக்கப்போது, "விளைகிறது" அதாவது

உண்டாகிறது என, பொருள்படுகிறது.

இத்தீயதுக்கு, "இருப்பு" இல்லவே இல்லை!

ஆனாலும், தோற்றமும், மாற்றமும், மறைவும்

இருப்பதாக உணர்த்தப்படுகிறது.

இங்குமேலே கூறிய, நன்மை யெனச்சொல்வது, காலாதீத

"பரமும்" பஞ்சகர்த்தாக்களாகிய "மூர்த்தி"களும்,

பஞ்ச "பூதங்களும்" அண்ட அண்டங்களும்!

மரம் செடி கொடி புல் பூண்டுகளாகிய "தாவர"



உ

4

வர்க்கங்களும்! நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன; மற்றும், கண்கருக்குத் தெரியாத, கிருமி கீடகங்களும், இணைந்த அனைத்து, "ஜீவராசி கங்களும்! (மனம்படைத்த) மனித இனமும்!" மற்றும், தேவ, தெய்வ, தேவதைகளாகிய, "அனைத்தும்! எல்லாம் ஒன்றாகிய, "பரம்" என்ற, அந்த காலாதீத, சொரூபத்திற்கு, அன்னியமாய் இல்லவே இல்லை! இல்லவே இல்லை!! இல்லவே இல்லை!!! அனைத்தும் நன்றே! அனைத்தும் சுகமே! அனைத்தும் சிவமே! அனைத்தும் நாமே! நாமே அனைத்தும்! ஆனால் மேலே இங்கு" கூறிய, அனைத்திலும், "எந்த நாமரூபமும்! இல்லவே இல்லை! "அது அதுவாகவே!" இருக்கிறது. இதுவே பிரமாண உண்மையாகும்!

"ஆனால்??"

இந்த மனித இனத்தை, மட்டும்! பற்றிய இந்த "மாயாவின் மனமானது" தாம் மட்டும், தம் இயல்பான ஸங்கல்ப விகல்பங்களால்,



உ

(5)

அதாவது, கற்பனையையும், அதன் ரூபம்,

# "குற்றம் குறைகள்,"

# "பேத உணர்வுகள்,"

# "விருப்பு & வெறுப்புகள்!"

இவைகளை, நாமே நமக்கு உண்டுபண்ணிக் கொண்டு;

முன் கூறிய நிலையில், "**தீமைகள்**" (அப்போதைக்கப்போது உண்டுபண்)ணிக் கொள்கிறது. நாம் நாமே, உண்டுபண்ணிய, தீமைகளை இந்த மனமானது

யாரோ செய்தார்கள் என்றோ, ஸ்ரீபகவானே செய்தான், என்றோ, (அல்லல் படுவதும் இந்த மாயாமனமே!
~~அல்லல் படுத்துவதும் இந்த மாயாமனமே!!~~)

நன்மையானது எப்போதுமே இருக்கிறது. பின் அதை, ஏன் "நன்றே வருகினும்" என்ற நிலையில், நன்று நம்மை, தேடி வருகிறது, எனச் சொல்கிறோம் என்றால்? இந்த மாயாமனதிற்கு, ஓர் தெளிவை, உண்டுபண்ணவும்; சோர்வு, அயர்வு, இவைகளை நீக்கி, "**நலத்தை**" கொடுக்கவும் நினைத்த மாதவும்; நன்று வருகிறது என உபசார வசனமாக, சொல்லப்படுகிறது, என உணர வேண்டும்! இங்கு நாம் "**அறிவாக**" இருந்து விட்டால், மேலே சொன்ன, மூன்று நிலைகளிலும், தீமைகள் வராது, என்று சொல்வதை விட, தீமைகள் இல்லையென்றே சொல்லலாம்.!



உ

அறிவின், ஆரம்ப சாதனையானது:-

ஓர் நாமரூப ஸ்ரீ பகவானை, கற்பனை சொரூபமாக ஏற்படுத்திக்கொண்டு, அவனிடம் எல்லாம் நீயே, எல்லாம் உன்னால்; எல்லாம் உன்னுடையதே.

என சர்வார்ப்பணமாக, விட்ட நிலையில், "நாமரூப, ஜகத், ஜீவர்கள்"! அனைத்தும், இல்லா விநாஷியும். இங்கு "குணதோஷங்கள்"! அனைத்தும், மறைந்த தன்மையிலே ஏக குணமுள்ள "ஸத்வ" குணமுள்ள, ஸ்ரீ பகவானே, நாம் ஆகிவிடுவோம். நாம் ஸ்ரீபகவானை நிலையில், முத்தொழில் சம்பந்த, ரூபலாவண்யமும், மஹிமைப்பிரபாவமும், (லோகமாயாவை) விட்ட நிலையில், "அதுவே நாம்; நாமே அது"! என நாம் நாமாயிருப்போம்.

ஆகவே தான், கடைசி வாசகத்தில், அன்றே பரம் என உனக்கு அளித்து விட்டோம்! என முடிக்கிறார். அதாவது? "அன்றும்! இன்றும்! என்றும்"! என்றென்றும், பரமே உள்ளது. அப்பரத்திற் கன்னியமாம், "நாமரூபம்"! எதுவுமே இல்லை! ஆனால் நீயே, உன் மனதை வைத்து ஆடுகின்றாய்! மாயையை வைத்து ஆட்டுகிறாய்! ஆனால் இதை, உலகநிலையில், விபரீதமாக பேசப்படுகிறது!





இதை, அடிப்படையாக வைத்துத்தான், ஓர் சிவனடியார் வாக்கு, அமைந்திருக்கிறது. அதாவது?

(நீ) நன்றே செய்வாய்! என்றும்,
(யாம்) பிழையே செய்வோம்!! என்றும்,

சுட்டிக்காட்டுகிறார்! அதாவது?

"நீயோ அறிவு" சொரூபம்! ஆனால் எம் குவணக்குறை நிறைவு, யாமோ "மனதின்" சொரூபமே! (கற்பனை சொரூபமே)

அறிவுக்கு, நன்மையை தவிர, தீமை இல்லவே இல்லை!

ஆனால் மனதிற்கு, தீமையை தவிர நன்மை இல்லவே இல்லை!

இது உன் நிலையில், "தெய்வீகத்தில்" பொருந்தும்,

அதைப்போல் நாம் நிலையில் "லௌகீகத்தில்" பொருந்தும்

ஆனால் "பரமார்த்திகத்தில்" இவ்விரண்டும்

இல்லவே இல்லை! இல்லவே இல்லை!! இல்லவே இல்லை!!!

இங்கு யாம் "மனதை" விட்ட நிலையிலும், நீ உன் "மாயையை" விட்ட நிலையிலும்;

"நீயும், யாமும், ஒன்றே!!!



உ

(4)

ஆனால் ???

இங்கு ஓர் உண்மையை உணரவேண்டும்!

அதாவது :- "யாம் அறிவது!"

"ஒன்றுமில்லை எனசொல்வதில்லை" அழகான ஓர் ஞானவார்த்தை

"ஒன்றேயுமல்ல!" என்கிறார்.

இதன் பொருள்?

புண்ணியமோ பாபமோ? நன்மையோ தீமையோ? சுகமோ துக்கமோ? இன்பமோ துன்பமோ? லாபமோ நஷ்டமோ?

இவை இரண்டுபட்ட நிலையில், இவை ஒன்றேயுமில்லை (ஆழ்ந்து தெளிந்த பொருளை) என்றார்.

அதனால்தான், அன்றே பரம் என, உனக்கு அறிந்துவிட்டோம் என்றார்.

எமக்கு இந்த, மனமயக்கத்தினால், விபரம் தெரியாமல், "அஞ்ஞான" இருளில், மூழ்கி இருந்தோம்.

எம்முடைய ஸ்ரீ ஸத்குருகிருபையினால், எமக்கு, மனமயக்கம் எப்போ விலகியதோ, அந்த க்ஷணமே, "எல்லாம்நீயே" "எல்லாம்பரமே" என நிர்மலமாக விட்ட தன்மையினால் "ஞானசூரியன்!" உதித்து, அஞ்ஞான இருள் அகன்றது!

"வாக்கேதேயதாய்" வாழைகிறது என ஸ்ரீ மஹான்கள் சொல்வார்கள்.



9

"யாம் பிழையே" செய்வோம்!

என்ற வாசகமானது எப்படி அமைகிறது என்றால்??? (இவ்வாக்கிய விளக்கமானது ஓர் தோற்றமேயன்றி உண்மையல்ல!) "யாம்" உன் குழந்தையே! அப்படி யானால், "யாம்" உன் அம்சமே! ஆனால்? "பிழை" என்ற சொல்லுக்கு யாம் காரணம் அல்ல! காரணமாய் இயங்குவது, இப் "புண்ணிய பாப" சம்பந்த உடலும், அதை இயக்கும், "மனதும்" ஆகும்!

யாம் உடலுமல்ல! யாம் மனதும் அல்ல! யாம் உன் அம்ச சொரூபமானதும், நீ எம் அம்ச சொரூபமானதுமான, "நம் ஆன்மாவே"!!!

ஆகவே, இப்பிழைக்கு நீயும் பொறுப்பல்ல! யாமும் பொறுப்பல்ல! மண் பதுமையான, இவ்வினை உடலே பொறுப்பாகும். ஆனால் இவ்வினை உடலோ, ஜடமாகவும், அறிவற்றதாகவும் இருப்பதால், அவ்வினை உடலும் பொறுப்பாகாது. ஆனால் அவ்வுடல், அவ்வினையை வைத்து இயக்கும் "மனமே" பொறுப்பாகும்!



உ

(10)

ஆனால், அம்மாயா மனமோ, மாயை
யின் ஒர் அம்சமாக குழந்தையாக
இருப்பதால், மாயையே பொறுப்பாகும்!

அம்மாயாவோ, தனக்கென, ஒர்
இருப்போ, ஸ்திரத்தன்மையோ இல்லாமலும், ஒர்
அம்மாயாவும் பொறுப்பல்ல.
"நிழல்" வடிவமாக இருப்பதால், அந்த
நிழலுக்கு ஆதாரம், திரிகர்த்தாக்களாக இருப்பதால்,
அவர்களை
அக்கர்த்தாக்களே பொறுப்பாகும். ஆராய மிடைத்து, அவர்களும்,
"பரசிவ" அம்சமாக இருப்பதால்,
அக்கர்த்தாக்களும் பொறுப்பல்ல.
அப்பர சொரூபத்தை ஆராய்ந்தால், அது "ஒன்றும்"
இல்லாமலும், "செயல்" படாத தன்மையாலும்,
அப்பரமும் பொறுப்பல்ல. ஆகவே,
நன்மையும் வரவில்லை! தீயதும் விளையவில்லை!

நன்மை செய்பவரும் இல்லை! தீமை செய்பவரும் இல்லை!

ஆனால்?
"அறியாமையின் மாந்தர்"!
உலகம் என்றும், ஜீவர்கள் என்றும், நன்மை தீமை என்றும்,
இன்ப துன்பமென்றும், கஷ்டம் கவலையென்றும், பயதுக்கம்
என்றும் பலவாறாக பிதற்றுகின்றனர்



உ (11)

அதாவது நாமரூப ஜகம் என, "ஒன்று"

இருந்தாலல்லவோ, அதில் பின்னிப் பிணையும்,

"மனமும் உண்டு!!!"

அம்மனம் இருந்தாலல்லவோ, அதை

வைத்து ஆட்டும் "விதிதேவதையும்" உண்டு!

இவை மூன்றும், இருந்தாலல்லவோ, "நன்று"

வரும்! "தீது" விளையமார்க்கம் உண்டு!

இம்மூன்றும், முக்காலமும், எக்காலமும், இல்லவே இல்லை.

இருப்பது, "மணைகியபரம்"! ஒன்றே!

அம்மண்ணே, சிவகாலம் பொன்றாக மாறியது! அதாவது

"திரிகோணங்களாக" வடிவெடுத்தது!

அப்பொன்னே (ஓர் களிம்பின்) "மாயா"

வின் உதவியால், பற்பல நாமரூப "ஆவரணங்க

ளாக" (மறைவுகளாக) வடிவெடுத்தது! அக்களிம்பாகிய மாயாவில்,

தோன்றிய, "மயக்கமனமே") அந்த நாமரூப

ஆவரணங்களை வைத்து விளையாடியது. நாவலந்த பரம்,

"காலத்தை" முடித்துக் கொண்ட தன்மையிறவ்,

களிம்பு என்ற மாயாமனம் "ஞானக்கனி"

காலாற்று → ஸத்குருவின்(





"பிறவி" தீர்ந்து, கருகி சாம்பலானது. எரிந்து,

களிம்பு இல்லாத தன்மையிறவ், ஆவரணம் என்ற நாமரூபமும், தம் நாமரூபத்தை இழந்து பொன்றாகியது! ஆவரணம் என்ற "நாமரூபம்" இல்லாத தன்மையிறவ் "பொன்னுக்கு"! அங்கே வேலியில்லை! அப்பொன், எங்கு தோன்றிய நேர, அந்த "மண்ணில்" (பரத்தில்) மறைந்து விட்டது. இப்போது மண் என்ற பரமே மிஞ்சியது. இந்த நிலையே அது அதுவாகவே இருக்கிறது. "ஆகவே"?

மண்ணிலிருந்து, பொன் வந்ததற்கோ?

பொன்னிலிருந்து, ஆவரணம் வந்ததற்கோ?

ஆவரணம் செய்ய (மாயா) மூலமாணவ களிம்பு வந்ததற்கோ?

"காலம்" என ஒன்று, முக்காலமும், இல்லாத தன்மையாவே; "அது அதுவாகவே"! இருக்கிறது! எதுவும் வந்ததோ, இருந்ததோ, மாறியதோ, மறைந்ததோ, எக்காலமும் இல்லவே இல்லை. "அது அதுவாக"! இருக்கும் போது, "நாம் அனைவரும்" அதுவே!! இதுவே சத்தியம். நன்மையும் வரவில்லை! தீயதும் வரவில்லை! (அதுவாகவே இருக்கிறோம்.)

உ

# துஷ்டனை கண்டால் தூரவிலகு!



கேள்வி:— ஐயா ஓர் சிறிய கேள்வி?

துஷ்டனை கண்டால், தூர விலகு!!!

எனச் சொல்கிறீர்களே? துஷ்டன் என்றால் மனிதனா? மனதின் துஷ்ட குணமா? மனிதனை போகச் சொல்கிறீர்களா? குணத்தைப் போகச் சொல்கிறீர்களா? மனிதனை போ எனச், சொல்லவும் இயலாது? குணத்தைப் போகச் சொல்லவும் முடியாது? இதற்கு சிறிய விளக்கம் தேவை?

பதில்:— நல்ல கேள்வியே, சற்று கவனமாகக் கேள்? மனம் படைத்தவனே மனிதனாவான். அதாவது, மனதின் பிடியில், அகப்பட்டவனே மனிதனாவான். அதே மனதை தன் வசப்படுத்தியவன், "மகான்"! ஆவான்.

இங்கு துஷ்டன் எனச் சொல்வதும், மனிதன் அல்ல! அம் மனிதனின், கொடிய "குணமே", துஷ்டனாகும்!

நீ கூறியபடி, அப்படிப்பட்ட மனிதனை, தூரப் போ என, சொல்லவும் கூடாது. அவனுள்ளும், "நற்குணமும்!" அவசியம் உண்டு!

அவனைப் போகச் சொல்லும் போது, அவன் நற்குணத்தையும், போகச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. மேலும், அத்துஷ்ட குணமாகிய துர்க்குணம், "அவன் வாக்கில்" இல்லவே இல்லை! அது "உன்னிடமே"! இருக்கிறதென, நீ உன்னுள் உணர்ந்தால், அவசியம் அதை, உன்னால் உணரமுடியும்! இதற்கு,





# "பொறுமையே"!

திறவு கோல் ஆகும்! உன் எதிராளியின்,
வாக்கிலோ, செயலிலோ, அஷ்டகுணம்
தோன்றினால், இறை குரு உணர்வுடன்;
"நீ பணியலாம்! அல்லது, நீ விலக
லாம்!" அவனை விலக சொல்லவும் கூடாது!
அவன் பணிவான் என, எதிர்பார்க்கவும் கூடாது!
நீ பணியாமல், விலகாமல், அவனுக்கு சரிசமமாக,
பேசினாலோ, செய்தாலோ, அவன் மனமும், உன் மனமும்,
வார்த்தையாலும், செயலாலும், "கடுமையா
கமோதி"! பிரச்சனைகள் தான், உண்டாகுமேயன்றி,
அமைதி, சாந்தி, ஆனந்தம், அவசியம் கிடைக்காது.
உனக்கு அமைதி வேண்டுமானால், நீயே பணி! நீயே விலகு!
அவனிடம் எதிர்பார்க்காதே!
"விட்டுக்கொடுத்தால் விகனாங்
கள் மறையும்"! என்பது, சத்திய வாசகமே!
இங்கு ஓர் உண்மையை, உணரவாய்! அதாவது, உன் வினை
க்குத் தக்கபடி, எதிராளியிடம் இருந்து, வாக்கும், செயலும்,



உ

நோற்ற மார்க்கம் உண்டு! வாக்கே செயலாக மாறும்! செயலே கர்மாவாக மாறி பிணைக்கும்! இவ்வாக்கிற்கு மூலம், "எண்ணமே" காரணமாக அமைகிறது. அவ்வெண்ணம் மனதிலுடையதே ஆகவேதான், எம் ரிஷி முனிவர் சொன்னர்! "மனம் தன்னில்" செய்ததுவே, செய்ததாகும்! "மற்றொன்றால் (உடலால்) செய்வது செய்தது ஆகாது"! என்றுன் ஆணித்தரமாக! உடலவையும் ஜடமே!

மனஎண்ணம் வாக்காக வரும்! வாக்கே செயலாக மாறும்! அச்செயலே கர்மாவாக பெருகும்! ஆகவே "எண்ணமே கர்மாவாகும்"! உடல் உலக இயக்கத்திற்கே மூலகாரணம், "வாக்கு" ஆகும். ஆகவே இங்கு, எண்ணத்திலும், வாக்கிலும், "இறை குரு" உணர்வு இருந்தால், அவ்வெண்ணம் கர்மாவை பெருக்காது. இங்கு இறை குரு உணர்வானது, பொறுமையையும், அடக்கத்தையும், அவர்களுக்கு கொடுக்கும்! இங்குதான், "பதறாத காரியம் சிதறாது"! என்பது, அனுபவத்தில் வரும். பொறுமையும், அடக்கமும், நமக்கு இயல்பாகவே, இறை குரு உணர்வினால், கிடைக்கும் போது,



16

நீ அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும்;
அடக்கினால் உலகம் உன்னை அடக்கி விடும்;
என்ற சத்திய வாசகமாய் உன் அனுபவத்தில் பிரகாசிக்கும்.
ஆகவே, துஷ்டன் என்பது நாமரூபத்தில் இல்லவே இல்லை! துஷ்டன் என்பவன் குண சொரூபமே!
எதிராளியின் துஷ்டகுணமோ, செய்கையோ!
உன் "அனுபவ" பாடத்தின் நிமித்தமும் வரலாம்!
அல்லது "உன் வினைக் கழிக்கவும்" வரலாம்!
அல்லது உன் அறியாமையினாலே, உன்னிடம் மறைந்து கிடக்கும்,
"கோர குணங்கள்" எதிராளியின் மூலமாகவும் வெளிப்படவும் வாய்ப்புண்டு!
இப்படி, மூன்று நிலைகளில், "துஷ்டன்" வெளிப்படுவதால், சாதனை உனக்கே தவிர எதிராளிக்கு இல்லை!
ஆகவே இங்கு "அடக்கமும்" "பொறுமையும்" உனக்குத்தான் வேண்டும்! அங்கு துஷ்டனை அவனை குறை கூறாதே! இஷ்டனும் துஷ்டனும் உன்னிடமே!
"நல்லவன்" ஒன்றால், துஷ்டன் போய்விடுவான்! "துஷ்டன்" விலகினால், நல்லவன் வந்துவிடுவான்!
இதன் சாதனை:- இறை குரு உணர்வு! பொறுமையும் அடங்குதலும்! ஆகும்!



உ

நாம் அடங்கினால், எதிராளி துஷ்டனாக, இருக்கும் பட்சத்தில், துஷ்டன் எப்படி பணிவான், என சந்தேகம் எழலாம். ஓர்

# "சத்திய அனுபவம்"!

என்னவென்றால்? இங்கும், அங்கும், எங்கும்,

# "தெய்வநம்பிக்கையில் "அந்த" ஒருவனே"

# "பரநம்பிக்கையில் அந்த ஒன்றே"

வேறு எவனும், வேறு எதுவும், இல்லவேயில்லை!

இங்கு நம்பிக்கையும், பொறுமையுமே, சாதனையாகும்!

இது எப்படி முடியும் என, கேட்கத்தான் தோணும்? பொறுமைக்கும், நம்பிக்கைக்கும், எடுத்துக்காட்டாக மகாபாரதத்தில், ஓர் சம்பவத்தை, சுட்டிக்காட்டுகிறேன். உணர்வால் உணர்க!

பாரதப் போரின் முடிவில், இளம் பஞ்சபாண்டவர்கள், எனச் சொல்லும், பாஞ்சாலியின் ஐந்து குழந்தைகளை, துரோணருடைய குமாரன், அஸ்வத்தாமன், எவருக்கும் தெரியாமல் நள்ளிரவில், சென்று வதம் செய்து விடுகிறான். விஷயம் அறிந்த, வில்வாளி விஜயன், கடும் சினத்தோடு, அஸ்வத்தாமனை விரட்டுகிறான். ஓர் தனித்த இடத்தில், அஸ்வத்தாமனும், காண்டீபனும், மோதுகின்றனர். நம் கண்ணன், சாட்சியாக, பார்த்துக் கொண்டிருக்கிறான். இருவரும், ஒருவருக்கொருவர், இளைத்தவர்கள் அல்ல! அவ்விருவர் போரில்,



உ



அஸ்திர சஸ்திரங்கள், அனைத்தும் முடிவு பெற்றன! முடிவில் அவ்விருவரிடமும், மூன்று "மஹா சக்தி" வாய்ந்த, திவ்யாஸ்திரங்கள் மட்டுமே இருந்தன.

1. "பாசுபதாஸ்திரம்" இது சிவனுக்குரியது.
2. "நாராயணாஸ்திரம்" இது விஷ்ணுவுக்குரியது.
3. "பிரம்மாஸ்திரம்" இது பிரம்மனுக்குரியது.

காண்டீபன், அந்த திவ்யாஸ்திரங்களை, எடுக்கத் தயங்கினான். கண்ணனும், கையமர்த்தி, பொறு என, சைகை காட்டினான். காண்டீபனும் "பொறுமையுடன்" காத்திருந்தான். அஸ்வத்தாமன், கொடூர குணத்தாலும், விரோத குரோதத்தாலும், காண்டீபனை அழிக்க வேண்டும் என்ற, "வஞ்சனத்தினாலும்" / காரணம், அவன் தந்தை துரோணரை காண்டீபன், வதம் பண்ணியதாலும் "ஆத்திர, ஆவேச அவசர" முடிவினாலும், முதலில் பாசுபதாஸ்திரத்தை, மந்திர உச்சாரணத்துடன், பிரயோகம் பண்ணினான் அஸ்வத்தாமன். இதை கண்ணுற்ற, காண்டீபன், "ஒருவிநாடி" நிலைதடுமாறி, தானும் தம் அம்புறாத்தூணியின், கூட்டினான்,



தம்மிடம் உள்ள, பாசுபதாஸ்திரத்தின் மீது, கை வைத்து, எடுக்க முனைந்தான்! அத்திவ்வியாஸ்திரத்தின் மீது கை வைக்கப்படி நம் "**கண்ணன்**" பணிவுடனும், உறுதி வேண்டும் உள்ளத்துடனும் அனுமதி கோரி நோக்கினான் காண்டீபன்! (இது இறை ஒரு நம்பிக்கையாகும் கேட்க வில்லை) நம் கண்ணனும், ஓர் மோகனப் புன்னகையுடன், பேசாமலேயே, ஓர் சமிக்ஞையுடன் தம் அபய கரம் காட்டி, "**பொறு**" என, சொல்லாமல் சொல்லி, உணர்வால், இவ் ரகஸ்யங்களை உணர்த்தினான்! அதை உணர்ந்தான், காண்டீபன். உடனே, நம் ஆயுதங்கள் (வில், அம்பு, உடைவாள், குத்துவாள், ஈட்டி, கதை) அனைத்தையும், அப்படியே விட்டவனாய், ஏதும் இல்லாதவனாய், ஓர் "**நிராயுதபாணியாய்**" அந்த புனித பாணம் வரும் திசையை நோக்கி, அமர்ந்தவனாய், "**ஓம் நமசிவாய**" என்ற பஞ்சாக்ஷர மந்திர தியான மூர்த்தியாய், கண்களை மூடிய வண்ணம், "**சும்மா சுகமாக**" இருந்தான். எதிராளியாகிய அஸ்வத்தாமன், காண்டீபன் செய்கையை கண்டு, அதி ஆச்சரியமாய், திகைத்து நின்றான். வந்த சக்தியாயுதமும், அதி உக்ரமாக, அக்கினி பிழம்புகளை, கக்கிய வண்ணம், வந்து காண்டீபன் நிலை கண்டு, அங்கு சர்வேஸ்வரன் இருக்கக் கண்டு, தம் வேகமெல்லாம் தணிந்து, அதிஅதிஅதி குளிர்ச்சியாகி



உ

நம் காண்டீபனுக்குள், சாந்தியாகி,
கரைந்து, கலந்து மயமாகிவிட்டது!
ஆத்திரக்காரனுக்கு, புத்தி மட்டு (புத்தி மறைபடும்) என்ற வாக்கியப்படி, இங்கு
அஸ்வத்தாமனுக்கு "**வேகம்தான்**!
உண்டாகியதே தவிர, அருள் **தாகம்**!"
(விவேகம் உண்டாகவில்லை)
உண்டாகவில்லை. அதாவது, கேடுவரும் பின்னே, அவன் மதி
கெட்டு வரும் முன்னே! என்ற சத்தியவாக்கிற்கிணங்க,
மேலும், அதி உக்ரத்துடன், நம் நாராயணாஸ்திரத்தை
எடுத்து, மந்திர உச்சாரணத்துடன், பிரயோகம் பண்ணினான்.
இங்கு கண்ணன் **(இறைகுரு)** இருமையிலும்,
காண்டீபன்!
நிலை தடுமாறாமல், அமர்ந்த நிலையிலேயே, கண்களை மூடிய
வண்ணம், "**ஓம் நமோ நாராயணாய**"!
என்று, அஷ்டாக்ஷர, மந்திர தியான பிரார்த்தியாய்,
**சும்மா சுகமாக**! இருந்தான். எதிராளி
யாகிய, அஸ்வத்தாமன், காண்டீபன் தொலைந்தான் என,
எக்காளமுடன் இருந்தான். வந்த சக்தி ஆயுதமும்,
அதி உக்ரமாக, அக்கினி பிழம்புகளை, கக்கிய வண்ணம் வந்து
காண்டீபன் நிலை கண்டு, அங்கு ஜனார்த்தனன் இருக்கக் கண்டு,
தம் வேகமெல்லாம் தணிந்து, அதி அதி அதி குளிர்ச்சியாகி,
நம் காண்டீபனுக்குள், சாந்தியாகி, கரைந்து, கலந்து, மயமாகிவிட்டது!
இங்கும், அஸ்வத்தாமனுக்கு, வேகம்தான், உண்டானதே தவிர,
ஆத்திரம் அடங்கவில்லை. கோபம் சண்டாளன் என்றும்,
கோபம் பாபம் அறியாது என்றும், ஸ்ரீமஹான்களின் வாக்குப்படி,



உ



அஸ்வத்தாமனும், பின் விளைவு தெரியாமல், காண்டீபனை, அழித்துவிட வேண்டும் என்று, ஒரே குறிக்கோளுடன், இருந்ததால் தன்னிடம் உள்ள, கடைசி ஆயுதமாகிய, பிரம்மாஸ்திரம் என்ற ஆயுதத்தையும், மந்திரத்தை உச்சரித்தவாறு, காண்டீபனை நோக்கி, ஏவினான். நம் காண்டீபனும், கண்ணன் மீதுள்ள அசைக்க முடியாத, "நம்பிக்கையும்! தான் கொண்டுள்ள, "சாந்தியே" வெல்லும் என்ற நிலையில் கொண்ட, "வைராக்கியமும்! கொண்டு, "இறை குரு உணர்வு" குன்றாமல்! நிதானமாகவும் அமர்ந்த நிலையில், கண்களை மூடிக் கொண்டு "ஓம் பிரம்ம தேவாய நம:"! என்ற ஸ்ரீ பிரம்ம தேவனின், மந்திரத்தை உச்சரித்தவண்ணம், "பிரம்மதேவனை, சும்மா சுகமாக" இருந்தான். எதிராளியாகிய அஸ்வத்தாமனும், கோபமும், ஆத்திரமும், பொங்க நின்றவன், அந்த கடைசி அஸ்திரமும், பிரயோகம் செய்தவுடன், தம் கையில் இனி ஒன்றுமே இல்லாத நிலை கண்டான்! ஆனால் காண்டீபனிடம் அம் மூன்று அஸ்திரங்களும், இருக்கக் கண்டான்! அந்த நிலையில், சென்ற பிரம்மாஸ்திரமும், சீறிப்பாய்ந்து சென்று காண்டீபனைக் கண்டதும், அங்கு காண்டீபனைக் காணவில்லை. அந்த அஸ்திரத்தின் அதிபதி, பிரம்ம தேவனைக் கண்டது. அந்த பிரம்மாஸ்திரமும், தம் எஜமானரைக் கண்டவுடன் மாயமாகி விட்டது.



உ



இப்போது?

நம் காண்டீபன், மூன்று திவ்யாஸ்திரங்களுடன், "கண்ணன்" பக்கத் துணையுடன், கம்பீரமாக நிற்கிறான்.

ஆனால், அஸ்வத்தாமனோ, அவனுடைய அஞ்ஞானத்தால், சேகரித்த, அஹங்காரம், (நான் ஓர் பிரம்மச்சாரி!) ஆதிக்கம், அதிகாரம், நான் ஒரு குருபுத்திரன், நான் ஓர் சிறந்த வீரன், எவராலும் வெல்லமுடியாத, சூராதி சூரன், என்ற, "அஹமமதை" அழிந்து! அவமானத்தால், கூனிக் குறுகி நிற்கிறான்! இங்கு இந்த சம்பவம் மிக முக்கியம்.

கண்ணன்:— (பார்த்தனுக்கு, எம்பிரானோ ஓர் பரீட்சை வைக்கிறான்)

ஹே காண்டீபா! பாண்டவ வம்சத்தை, கருவறுத்தவன், இக் கொடியவனும். பாஞ்சாலியை, கதற கதற, செய்த கொடிய பாவி இவனே. இவன் மஹா கல்நெஞ்சினன். இவன் ஒரு இரக்கமற்றவன். பஞ்சமஹா பாதகமாகிய, "சிசுஹத்தி" செய்த கொடும் காதகன். இவன் மனிதனுமல்லன். ஓர் அசுர குணம் படைத்த, அரக்கனுவான் இவன். இவனை இவ்வுலகில், வாழ விடவே கூடாது. இவன் இங்கு, வாழத் தகுதி இல்லாதவன் என்கின்றனவும், பற்பல விதமாக, கடும், சுடும், நிஷ்டூர வார்த்தைகள் சொல்லி, நிந்தித்த வண்ணம், உன் உடைவாளையெடு. உடனே சென்று, அவன் தலையை வெட்டியெடுத்து, உன் மனைவி, பாஞ்சாலியின், பாதங்களில் காணிக்கையாக வை. உடனே நிறைவேற்று எனத் துரிதப்படுத்துகிறான், அந்த கபட நாடக ஸூத்ரதாரி!



உ

காண்டீபன் :– நம் கண்ணனின் இந்த வாசகங்களையெல்லாம், "அமைதியாக ஸ்ரீகண்ணனும்"! நம் உரைத்ததை, பாதிக்காதவராய், எம் பிரபுவின், பாதங்களில், விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்று கொண்டு, அஞ்சலி ஹஸ்தனாய், அமைதியாய் "பரிவான குரலில்," "பணிவான தொனியில்!" ஹே கமல நயனா! கருணைக் கடலே! காருண்ய வள்ளா! அபயப்ரதாயா!

இவன் என்ன "குற்றம்" செய்தான்? இவனை தண்டிப்பதற்கு யாம் யார்? வினையின் பாவங்கள், வந்து, இருந்து, மறைவது சகஜம் தானே? இவன் போட்ட வேஷத்தை, குறையின்றி, செய்து முடித்திருக்கிறான். இவனை தண்டிப்பதற்கு, எமக்கு அதிகாரம் இல்லை. இவனை அழிக்கவும் யாம் வரவில்லை! இவன் தாவுத்திற்கு, மறைவு (மரணம்) எப்போதோ, அப்போது அது குறையின்றி நடைபெறும்! அதை யாம், செய்யவும் தேவையில்லை! செய்யவும் மாட்டோம்! மேலும், ஸாஸ்திர நியதியால், நீ கூறும் ஸத்திய வாசகம், எப்படி அமைந்திருக்கிறது என்றால்?

1. இவன் ஓர் பிராமணன்! பிராமணனை கொல்லவாகாது!
2. இவன் ஓர் குருபுத்திரன்! குருபுத்திரனை கொல்லவாகாது!
3. இவன் ஓர் பிரம்மசாரி! பிரம்மசாரியை கொல்லவாகாது!
4. இவன் ஓர் அனாதை! அனாதையைக் கொல்லவாகாது!
5. எல்லாவற்றிற்கும் மேலாக, இவன் ஓர் "நிராயுதபாணி!" நிராயுதபாணியைக் கொல்லவாகாது!



உ

என, கண்ணன் கூறிய, தர்மத்தைச் சொன்னான் காண்டீபன்! எம்பிரபுவாகிய, கண்ணனும், சிரித்துக் கொண்டே, இதைச் சொன்னான்:— இவன் பிராமணனல்ல! பிராமண அதமன்! இவன் குரு புத்திரனல்ல! குருத்துரோகி! இவன் பிரம்மச்சாரி அல்ல! கௌரவ இனத்தின், ஸம்ஸாரி! இவன் அனாதையல்ல! "பெரிய குடும்பி"! அஸ்வத்தாமன் தலையிலுள்ள, ஒற்றை கொம்பை சுட்டிக் காட்டினான். ஆனாலும், நீ சொன்ன நியதியில், இப்போது இவன், ஓர் நிராயுதபாணிதான்! உண்மையில் நிராயுதபாணி இல்லை, நிராயுதபாணி ஆக்கப்பட்டான். நீ உன் மனைவி, திரௌபதியிடம், அஸ்வத்தாமனின் "சிரம் கொய்து"! வருவோம் என, சபதம் கூறி வந்தாய், ஷத்திரிய தர்மப் படி அது ஸத்திய சங்கல்பமாகிறது. அவ்வாக்கைக் காப்பாற்றும் நிமித்தமாக, அந்த அஸ்வத்தாமனின் "ஒற்றை கொம்பை" அகற்றி விடுவாயாக. அது அவன் தலையாய தந்நாகும். அக்கொம்பே, அவனுடைய, "ஆணவமாகும்"! என கண்ணன், கனிவாக உரைக்க, காண்டீபனும், கண்ணன் வாக்குக்கு, கட்டுப்பட்டு, அவன் கொம்பை எடுத்து விட்டான். அந்த வினையே, அஸ்வத்தாமனின் "ஆணவம்" அழிந்தது!

உ





இக்கதையின் மூலம் நீங்கள் உணர்வது?

"துஷ்டனைக் கண்டால் தூர விலகு" என்றால்

1. "பொறுமை" உனக்கு வேண்டும்!
2. "நீ பணியலாம், நீ விலகலாம்"!
3. இறை குரு உணர்வுடன், "நீ விட்டுக்" கொடுக்கலாம்.
4. ஆத்திரம், அவசரம், வேகம், விரோத குரோதம், பழிவாங்கும் உணர்ச்சி, இவைகளிலிருந்து எண்ணங்கள், உன்னை தாக்காமல் "அமைதி" காக்கலாம்!
5. "எல்லாம் நலமே" என நீ எண்ணினால், அவசியம் நலமாகவே முடியும்!

பதிலுக்குப் பதில் பேசுவதாலோ! பதிலுக்குப் பதில் செய்வதாலோ! அவன் பேசுவதையோ, செய்வதையோ, மனதை மயபயமீது எண்ணம் கற்பனை பண்ணுவதாலோ! அங்கு மனம், "விகாரம்" அடைவதாலோ! அவஸ்யம், "விவகாரம் (பிரச்சனைகள்)" வந்தே தீரும்! அங்கு நாம் அடங்குவதே வழியாகும்! அடக்குவது வழியும் அல்ல! விவேகமும் அல்ல!



உ



**1. பிராமண அதமன்:—** தர்ப்பையை ஏந்தும் கரத்தில், கொலைக்கருவியாகிய, ஆயுதம், ஏந்தியிருக்கிறான். மந்திரம் சொல்லும் வாயால், புன்மொழியும், புகழ் மொழியும், புகல்கிறான். உஞ்ச விருத்தி பெறுபவன், ஊதியம் பெறுகிறான். பொறுமையுடன், அடங்கி வாழ்பவன், பொறுமையுடன், அடக்கி வாழ்கிறான். "**இறை**" நம்பிக்கைபோய்; "**இரை**" நம்பிக்கை ஆகிவிட்டது!!!

**2. குருத்துரோகி:—** வேதம் ஓதுபவன், பணத்திற்காக, விலை போகிறான். வேதமும், மந்திரமும், கற்றுக் கொடுப்பவன், கொலைப் பயிற்சியை, கற்றுக் கொடுக்கிறான். தம் சிஷ்யர்களிடம், பணிவே பாதையாக, கற்றுக் கொடுக்க வேண்டியவன் (**அஹங்கார**) "**அறிவு**" பாதையை, கற்றுக் கொடுக்கிறான்.

**3. பிரம்மச்சாரி:—** ஆத்மாவையும், இறை கருணையையும், ஆஸ்ரயித்து இருக்க வேண்டியவன், கௌரவம், பேர், புகழ், பட்டம், பதவி, முதலிய, "**அஹங்காரத்தை**" ஆஸ்ரயித்து இருக்கிறான்! இவன் பிரம்மச்சாரியல்ல!

**4. அனாதை:—** ஸ்ரீபகவானையும், ஸ்ரீ ஸத்குருதேவரையும், முழுமையாக அண்டியவனே, "**அனாதை**" ஆவான். நாமரூப சொரூபமான, "**மண். பொன். பெண்.**" இம்மூன்றின், துணையுடன் வாழ்பவன், எவனாயினும், அவன் ஓர் "**ஸம்ஸாரியே!**" ஓர் "**குடும்பியே!**"



உ



அவன் அனாதை அல்ல! (இங்கு அஸ்வத்தாமன், ராஜபோகத்துடன் வாழ்ந்தவன்)

5. நிராயுதபாணி :- இங்கு அஸ்வத்தாமனை, போர் செய்து, ஆயுதம் "இழந்த நிலையில்" அவனை, நிராயுதபாணி என குறிப்பிடுவது, உலகியல் தர்மத்துக்குப் பொருந்தும். ஆனாலும் அவன், சகல ஆயுதங்களுடனும், அஹங்காரம், ஆதிக்கம், அதிகாரம், இவைகளுடன், "தற்காப்பு சக்தி"யுடன் போரிட்டான். இப்போது இவனுடைய, அஹங்கார வெறியினால், அனைத்தையும் இழந்த நிலையில், நிராயுதபாணி ஆனான் (ஆனான் என்பதை விட ஆக்கப்பட்டான்). இது "தெய்வியல்" தர்மத்திற்கு பொருந்தாது. பின் எது, பொருந்தும் எனப் பார்த்தால்? காண்டீபனானவன், முப்பெரும் சக்தி ஆயுதம், தம் வசம் இருந்தும்; அனைத்தையும் "விட்ட நிலையில்" ஓர் பயங்கர எதிராளியின் முன், "ஸ்ரீபகவான்" (இறை குரு) நம்பிக்கையுடன், "நீயே கதி" என சும்மா சுகமாக, இருந்தானே, அதுதான் முதல் தரமான, நிராயுத பாணியின் நிலை! என ஸ்ரீ மஹான்கள் சொல்வார்கள்.



# 3 "பிறவி ரகஸ்யம்" (28)

ஓர் அரசனுக்கு, இறைவன் கிருபையினால், ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு, வலது தொடையில், ஓர் மச்சம் இருந்தது.

இந்த மச்சத்தை, அரசன், அரசி, மந்திரி, ஆகிய மூன்று நபர், மட்டுமே அறிவர். வேறு எவரும் அறியார். குழந்தை பிறந்து, ஒரு மாதம் தான் ஆகியது. அது சமயம் மந்திரிக்கு, விரக்தி ஏற்பட்டு, காட்டிற்கு சென்று விட்டான். அடுத்து,

ஒரு சில நாட்களில், வன வேடர்கள், என்று சொல்லும், ஓர் கொள்ளை கூட்டம் சிலர், அரண்மனையில் புகுந்து, சில ஆபரணங்களை, களவாடிச் சென்றனர்! அப்படி செல்லும் போது, அத்திருடர் கூட்டத்தலைவன், கண்களில், தொட்டிலில் படுத்துறங்கும், அப்பச்சிளம், சிசுவை கண்டான் போலும்? அக்குழந்தையையும், தூக்கிச் சென்றுவிட்டான். மறுநாள் காலையில், திருட்டுப் போன விஷயமும், குழந்தை காணாமல் போன விஷயமும், அரசனுக்கும், அரசிக்கும், தெரிந்தது. எவ்வளவோ, பிரயாசைப்பட்டு தேடியும், அந்த திருடர்களை, பிடிக்க முடியவில்லை. அந்த அரசனும், அரசியும், மிகவும் கவலை அடைந்தனர். என்றாவது, மகன் கிடைப்பான், என்ற நம்பிக்கை, அரசனுக்கு இருந்தது.

சில ஒற்றர்கள் மூலமாக, எப்படியாவது குழந்தை கிடைக்கும், என்ற நம்பிக்கையில், தேடலுற்றான். ஆனால் குழந்தை கிடைக்கவில்லை. இந்நிலையில் வருஷம் **15** ஆகிவிட்டது!

காட்டிற்கு தூக்கிச் சென்ற, வேடுவன் என்ற, திருடர் கூட்டத்தலைவன், அவனும், அவன் மனைவியும், அக்குழந்தையை, அதிக கவனத்துடன், வளர்த்து வந்தனர். அச்சிறுவனுக்கு வயது **16** ஆகியது. அவன் வேடர்களால், வளர்க்கப்பட்ட தன்மையினால், **வேடர் குலத்தொழில்!**



உ

சிறப்பாக ஒன்றுக்கொண்டான் அச்சிறுவன்.
1. மிருகங்களை வேட்டையாடுதல்!
2. பறவைகளை கன்னி வைத்துப் பிடித்தல்!
3. சமய சந்தர்ப்பங்களில் கொள்ளையடித்தல்!
4. மொத்தத்தில், ஓர் "காட்டு மிராண்டி" (காட்டுவாசி) எனஆகி மலைவாழ் மக்களில் ஒருவனானான்!

நாட்டைவிட்டு துறந்து, காட்டிற்கு வந்த மந்திரி அக்கானகத்திலேயே, ஓர் துறவியாய், வாழ்ந்து வந்தான். "தெய்வாதீனமாக"! இச்சிறுவனை கண்டான்; மந்திரிஎன்றதுறவி! பலமுறை, இவனுடைய, நடை, பேச்சு, பாவனை, முகதேஜஸ், இவைகளை கவனித்த, அத்துறவிக்கு, இவன் நம், அரசகுமாரன்தான், என்று முடிவு செய்தான்.

ஒருநாள் மந்திரியான துறவி, அச்சிறுவனிடம், உரையாடினான்!

துறவி:— குழந்தாய்! நீயார்? இக்கானகத்தில், என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

சிறுவன்:— ஐயா, நான் ஓர் வனவேடுவச் சிறுவன்! என்னுடைய தந்தை, இக்காட்டிற்கு அதிபதி! அவர் "ஓர் காட்டரசன்"! என்தந்தையின் பெயர், ஸ்ரீரங்கன்! என்தாயார் பெயர், ராக்காயி! என் பேர் முண்டன்! என்தொழில், மிருகங்களை வேட்டையாடுதல், பறவைகளை கன்னிவைத்துபிடித்தல்; மிருகங்களின் தோலையும்; பறவைகளையும், அந்த



உள்ள ஊர்களில் விற்று, எங்கள் தேவைக்கு வேறு பண்டம் வாங்கி வருதல். இதுவே என்னுடைய, "இன ஜன குடும்ப" பாரம்பரியமாகும்! ஆமாம், என்ன இவ்வளவு, அக்கறையோடு கேட்கிறீர்களே! நாங்கள் யார்?

துறவி :- குழந்தாய்! யாம் ஓர் துறவி! இக்கானகத்திலேயே பலகால வாசம் செய்கிறோம்! "இறைவன்" தேடி அலைபவனே எம்போலே! யாம் உன்னை, பலகாலமாக கவனித்தே வருகிறோம்! உன்னைக், கூர்ந்து நோக்கும் போது, நீ "வேடவச்சிறுவனாக" எமக்குத் தோற்றவில்லை!

சிறுவன் :- (சிரித்துக் கொண்டே) நல்ல ஆள் ஐயா நீங்கள்! என்னுடைய அப்பா அம்மா! அவர்கள் அப்பா அம்மா! மேலும் என் கொள்ளுத்தாத்தா, கொள்ளுப்பாட்டி, இப்படி, பலபல தலைமுறைகளாக, இக்காட்டிலேயே வாசம் செய்து வருகிறோம். என்னைப் போய், நீங்கள் வேடவச் சிறுவன், இல்லையென்கிறீர்களே? உமக்கு வேறு வேலையில்லையா? உம் காரியத்தை, நீர் பாரும்! என் காரியத்தை, நான் பார்க்கிறேன் என, சொல்லி போய்விட்டான் அச்சிறுவன்.

மந்திரியான துறவியும், சிரித்துக் கொண்டே, சென்று விட்டார். சில நாட்களில், மீண்டும் இருவரும் சந்தித்தனர்.

துறவி :- குழந்தாய்! சற்று நில்! உன் வலது கால், தொடையை காட்டு என்றார். அவனும், துணியை விலக்கி காட்டினான். முன்பு மந்திரியாக இருந்த போது, கவனித்த அதே ராஜமச்சம் இருக்கக் கண்டார் துறவி!



உ

துறவி சொன்னார்:— குழந்தாய்! உண்மையில் நீ வேடுவச் சிறுவன் இல்லை; நீ ஓர் "அரசகுமாரனே"! யாம் ஸத்தியம் புகல்கிறோம். எம்மை நம்பு!

ஒருவன்:— கலகல கலகல கலவென சிரித்தான்! ஐயா! பெரியவரே! நான் ஓர் அரசகுமாரன்தான். ? யார் என்னை, அரசகுமாரன் இல்லையெனச் சொன்னது நான் இக்காட்டின், அரசகுமாரனே! "நான்" "நாட்டின் அரசகுமாரன்!" இல்லை! இது இங்கு எல்லோர்க்கும், தெரிந்தது தானே!

துறவி:— இல்லை குழந்தாய்! நீ காட்டின் அரசகுமாரனில்லை! நீ நாட்டின் அரசகுமாரனே!

ஒருவன்:— ஐயா இது என்ன? பைத்தியம் போல், உளறுகிறீர்? ஓர் நாட்டை ஆளும் சக்ரவர்த்தி, மகன் என்றால். அவர்க்குரிய, "ஆடை" "அணிமணிகள்" "ராஜதோரணம்", இவைகள் எல்லாம் வேண்டாமா? என்னுடைய அம்மா அப்பா! நாக்காயி! மூக்கன் தான்! என் பெயர், மூண்டன் தான்! நீங்கள், ஆள் மாறாட்டம் செய்து, என்னை எதையோ செய்யப் போகிறீர் போலும்? இனி உம்மிடம் பேசுவதோ, பழகுவதோ, பெரிய தவறு என, எனக்குப் படுகிறது. இனி உம்மிடம் பேசிக்கொண்டிருந்தால், நான் கெட்டுப் போவேன் என் சொல்லி ஓடிப் போய்விட்டான்.





சில நாட்களில், மீண்டும் அவ்விருவரும்,
சந்தித்தனர். துறவி அவனை நிறுத்தி,
விழித்துக்கொண்டு சொன்னார்!
குழந்தாய்! நீ ஓர் அரசகுமாரனே! நீ
வேடுவ காட்டரசன் இல்லவே இல்லை!
அதன் அடையாள சின்னம், உன் வலது தொடையிலுள்ள,
"மச்சமே" சாட்சியாகும்! யாம் வெகுகாலமாக,
அங்கு மந்திரியாக இருந்தோம். ஓர் நாள் அரண்மனையில்,
இங்கு உள்ள வேடர்கூட்டம், புகுந்து அங்கு கொள்ளையடிக்க வந்
தது. பொருள்களை, கொள்ளையடிக்கும் பொழுது, நீ ஒருமாத
குழந்தை. உன்னையும் இத்திருடர் தலைவன், தூக்கிச் சென்று
விட்டான். நீ ஒருமாத குழந்தையாக இருந்ததால், உனக்கு
அச்சம்பவம், ஞாபகம் இருக்க முடியாது தான். உன்
அப்பாவாகிய சக்ரவர்த்தி, நீ எப்படியும் வருவாய் என,
"நம்பிக்கையுடன்" காத்துக் கொண்டு
இருக்கிறார். உன் வலது தொடையில், உள்ள மச்சம்
எமக்கும், அரசருக்கும், அரசிக்கும், மட்டுமே தெரியும்!
எம்முடன் வா! யாம் உன் ஸ்ரீமாதா பிதாவுடன், சேர்த்து
விடுகிறோம்! என கனிவாக சொன்னார் துறவி! இதை அவன்
நம்பவில்லை! இவர் ஏதோ "மோசம்" செய்கிறார் என
எண்ணி
பயந்து ஓடி விட்டான். இப்படி "பலமுறை"
அந்த துறவி அழைக்க,
திரும்ப திரும்ப சொல்ல, அச்சிறுவன் மனம் திருந்தினான் போலும்?



ௐ

சிறுவனின் சிந்தனை:— இப்பெரியவர், நம் இனத்தவர் நம் வயதை ஒத்தவர்கள், அனேகரை காணக்காண் செய்கிறார். அவர்களில், எவரையேனும், இப்படி சொல்லி அழைக்கிறாரா? எனப் பார்த்தால் இல்லையே? நம்மைத்தானே, "திரும்ப திரும்ப" சொல்லி அழைக்கிறார்! ஒருவேளை, இவர் சொல்வது சரியாக இருக்கலாமோ?

"நான்"! அரசகுமாரனா?

"நான்"! வேடுவச் சிறுவனா?? இப்போது, இது நமக்கே பெரும், குழப்பமாகவல்லவா இருக்கிறது? ஒரு முறை இந்த (நற்காவிக) அப்பா, ஓர் கதை சொன்னாரே! அதை கவனிக்கும் போது, இப் பெரியவர் சொல்வது, உண்மையாக இருக்கும் போல் தோன்றுகிறதே?

அக்கதையாவது???

"பழக்க" (பேச்சின் மயக்கம்) "வழக்க" (செய்கையின் மயக்கம் தோஷம்)!!!! "மிக. மிக. மிக. மிக. மிக" கடுமையாகும்! கொடுமையுமாகும்!

ஓர் ஆட்டு மந்தையில், ஓர் நிறைகர்ப்பிணியான, ஓர் புலி. (வேங்கை) ஓர் ஆட்டை தூக்கிச் செல்ல பாய்ந்தது. பாய்ந்த வேகத்தில், அப்புலியின், கர்ப்பம் நழுவி விழ, அப்புலி இறந்து போனது. அப்போதுதான் வெளியில் வந்த "புலிக்குட்டியை"! இறைவன் கிருபையாலும், ஓர் தாய் ஆடானது கர்ப்பத்தை விட்டு,



"தம்" குட்டியாகப் பாவனை செய்து, தம் பால் கொடுத்து, அதைப் புல் மேயக் கற்றுக் கொடுத்துக் காப்பாற்றிக் கொண்டது!

"விதிவசத்தால்"! ஆட்டு மந்தையில் சேர்ந்த புலிக்குட்டியானது, தம் இனத்தை (புலி இனத்தை) அடியோடு மறந்து, ஓர் ஆட்டின் "பழக்க வழக்கங்களை"! மேற்கொண்டது. (ஆட்டின் ஸ்வபாவம் இருந்ததே தவிர, புலியின் ஸ்வபாவத்தை, அடியோடு மறந்து விட்டது). இது

(பழக்க வழக்கத்தினாலே! உாயகதை

இப்புலிக்குட்டியும், மற்றும் ஆடுகளைப் போல, புல் மேயவும்; ம்மேமே! ம் மே மே! ம் மேமே! எனக் கத்தவும்; குனிந்த தலை நிமிராமல், முன் செல்லவும், ஆட்டின் காலை மட்டுமே, கவனித்துக் கொண்டு பின் செல்லவும், இயற்கையாக, அமைந்து விட்டது. (புலியைப் போல், மாமிஸம் தின்பதும் இல்லை! புலியைப் போல், பிளிருவதும் இல்லை! (கர்ஜிப்பதும்)) "தன் இனத்தை" அடியோடு மறந்து விட்டது. இதன் அடிப்படைக் காரணம், "பழக்க வழக்கமே" ஆகும்! (ஆகவே எம் ஆத்மானந்தக் குழந்தைகளே இப்பழக்க வழக்கம், எத்தனை கொடியது என உணருங்கள்)



35

சில மாதங்களில், இந்த புலிக்குட்டி, வளர்ந்து பெரியதாகிவிட்டது. ஆனால் அதன் தன்மை மாறவில்லை! ஆட்டின் தன்மை மாறவில்லை!

ஓர் நாள், வேறொரு பெரிய வேங்கை, (புலி) ஒன்று, இந்த ஆட்டு மந்தையை கவனித்தது. ஓர் ஆட்டை, அடித்து இழுத்துச் செல்ல, பதுங்கி இருந்து கவனித்தது. அந்த வேங்கையின், கண்களில் தம் "இனங்களில் ஒன்று" ஆட்டு மந்தையோடு மந்தையாக போகக் கண்டது. அதி ஆச்சரியம் கொண்டு, ஒரே பாய்ச்சலாக பாய்ந்து, அப்புலிக்குட்டியை, தூக்கிச் சென்று விட்டது. புலியால், தூக்கிச் செல்லப்பட்ட, இப்புலிக் குட்டியானது, பயத்தால், பிராணபீதி அடைந்து, (புலியின் வாய்ப்பிடியில், இருந்து கொண்டே, அப்புலிக்குட்டியின் கதறல்:)

ஐயோ தெய்வமே! என்னை, ஓர் கொடூரமான புலி, அடித்து இழுத்துச் செல்கிறதே! என்னை காப்பாற்றுவார் யாரும் இல்லையே. என் வாழ்வு, இப்படியா முடிய வேண்டும்? ஐயோ! நான் சாகப் போகிறேனே! என்னை இந்த, கொடூரமான புலி, தன் கோரை பற்களால், கடித்து குதறி, ரத்தத்தை குடித்து, நார் நாராக கிழித்து, கொஞ்சமும், மிச்சம் இல்லாமல், சாப்பிட்டு விடுமோ? என் கதி, இப்படியா ஆக வேண்டும்? என புலம்பிக் கொண்டே, புலியின் வாயினுள் கௌவப்பட்ட வண்ணம், சென்று கொண்டிருந்தது!

"பழக்க வழக்க தோஷத்தால், ஓர் ஆட்டின் ஸ்வபாவமான" ஓர் புலிக்குட்டி) பெரிய வேங்கையானது, தாம் தூக்கிச் சென்ற தம் இன புலிக்குட்டியை, காட்டின் ஓரமாக, கொண்டு வைத்துக் கொண்டு;



வேங்கை:- ஆமாம் குழந்தாய்! நீ எப்படி, அந்த கூட்டத்தில் சேர்ந்தாய்? அது ஆட்டு மந்தையாயிற்றே? உன்னுடைய "அம்மா" எங்கே? உன் அம்மாவை விட்டு, ஏன் பிரிந்தாய்? அந்த ஆட்டுக் கூட்டம், ஆயிரம் ஆயிரம் இருந்தாலும், நம் இனம், (வேங்கை) ஒன்றைக் கண்டாலும், அலறி அடித்து ஓடிவிடுமே! உன் ஒருவனைக் கண்டும், அக்கூட்டம், ஓடாமலிருக்கக் காரணம் என்ன? நீ எப்படி அவைகளுடன் பழகிக் கொண்டாய்? (என பலவாறாக, கேட்டுக் கொண்டிருக்கும்போது)

புலிக்குட்டி:- ஏ வேங்கையே! நீ என்னென்னவோ, சொல்கிறாயே? "நான் ஆடு ஆடுதான் நீயோ வேங்கை வேங்கை தான்!" நானும், நீயும், எப்படி ஒன்றாக முடியும்? என் அம்மாதான், எனக்கு பால் கொடுத்து காப்பாற்றினாள். என் அம்மாதான், எங்கள் இனத்தின் உணவான, புல், இலை, தழை இவைகளை சாப்பிட சொன்னாள், அவனும் அவைகளையே சாப்பிட்டான்! நான் ஓர் சாதுவான பிராணி! நீ ஓர் கொடூரமானவன்! நீ ஏதேதோ, வாலியாட்டாக, பேசி பேசி, என்னை மயக்குகிறாய். எப்படியும் என்னை நீ, அடித்து கிழித்து, சாப்பிடாமல் விடுவதில்லை! உன் பார்வையால் (குரூர பார்வையில்) பட்டபின், நான் மீள முடியுமா? என் கதி அதோகதிதான், என புலம்பி, அழுதது புலிக்குட்டி!



(36.A.)

உ

இங்கு ஓர் உண்மையை உணர்!

ஓர் ஆட்டு மந்தைக் கூட்டத்தில், "லின்" வசந்தாலும், "லிகி" வசந்தாலும்; ஓர் புலி (க்குட்டி) சேர்ந்து விட்டது, எனக்காண்கிறோம்.

அப்புலியை, அம்மந்தையின், எல்லா ஆடுகளும், பார்க்காமல், இருக்கமுடியாது!

வெளியில், ஓர் புலியை கண்டதும், திலி அடித்து ஓடும், ஆட்டு மந்தைகள், தம் கூட்டத்தில், இருக்கும், ஓர் புலியை மட்டும், கண்டு, பயம் இல்லாமல் "சகஜமாக்" பழகிய நிலை என்ன?

இங்கும் ???

"பழக்க" (வார்த்தை மயக்கம்) "வழக்க" (நடைமுறை பாவனை) தான் காரணமாகும். இங்கு முக்கியம் என்னவென்றால்?

"நாம" (புலி) "ரூபம்" (புலியின் தோற்றம்) கூட எடுபடவில்லை! அவை தன் இனத்தோடு, இனமாய் "உண்டு உறங்கி" அனுபவித்தால், போதும் அங்கு "ஜகவாஸதோஷ" "பழக்க வழக்கமே" மாற்றிவிடுகிறது. மாற்றிவிடுகிறது என உணர்க!

நந்த பாவா



உ

௩௭

வேங்கை :- குலுங்கி, குலுங்கி, குலுங்கிச் சிரித்தது. எம் அம்சமான புலிக்குட்டியே! வீணே பயந்து சாகாதே! நீ எம் இனம்தான்! நீ ஆட்டு இனம் அல்ல! ஆட்டு இனம் நம் “உணவு ஆகும்!”

புலிக்குட்டி :- திமிறி ஓடும் நிலையில் பார்த்தாலும் அதால் இயலவில்லை! காரணம்: பழக்கவழக்க “தோஷத்தால் வந்த பலஹீனமான” உள்ளம் ம்மே மே! ம்மேமே! ம்மேமே! என கத்த தொடங்கியது!

வேங்கை :- குழந்தாய்! ம்மேமே! ம்மேமே! (நான் ஜீவன்! நான் ஜீவன்) என கத்தாதே! எம் போன்று, “உர்ர்ர்! உர்ர்ர்! (யாம் ஆத்மா! யாம் ஆத்மா!) என கர்ஜிக்க வேண்டும்! அற்புதமான, “புலி”! (நான்! என்றால்! என்னுடையது! என) புசியாதே! நான் ஓர் ஆட்டை, அடித்து உனக்கு கொடுக்கிறேன். அந்த “ஆட்டு மாம்ஸத்தையே! (எல்லாம் ஒன்றே! அநுபவமே! அது யாமே! அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்! எமக்கன்னியம் எவையுமில்லை)



(38)

# "ஐக்யமான"

(அதாவது **ஸத்தான** உண்மையே)

இனி நீ உணர வேண்டும்!

புலிக்குட்டி :– நீ என்ன சொல்கிறாய்? எனக்கு புரியவில்லையே!

## "நான்; நீ ஆகமுடியுமா?"

நீயோ எவ்வளவு பெரிய சக்திமான்? (இறை குரு உணர்வு)

உன் கர்ஜனையில், அனைத்து ஆட்டுக் கூட்டங்களும், சிதறி ஓடி விடுமே!!! (உன் வாக்கால், அஞ்ஞான இருள் ஓடி விடுமே.)

"**நான்**" ஓர் அற்பமான, "**ஆடு**" குட்டிதானே? (நான் பந்தப்பட்ட, அற்ப ஜீவன் தானே?)

இப்படி புலம்பிக் கொண்டிருந்த புலிக் குட்டியை, அரவணைத்துக் கொண்டு சென்று, ஓர் நீர்த்தடாகத்தில், "**தன்னையும்; அதையும்**" பிம்ப சொரூபத்தைக் காட்டி (பற்பல ஸத்திய, உதாரணங்களை உணர்த்தி) அதை நம்ப வைத்து விட்டது. அந்த வேங்கையை, தன் தற்காலிக தந்தை சொன்ன கதை, ஞாபகத்திற்கு வந்தது! உடனே, தன்னை ஓர் வேடனாகவே இதுகால பரியந்தம் "**அற்பமானவனாய்**" பாவனை செய்து வந்த அரசகுமாரன், அப் பெரியவரை (ஸத்குருவை) நமஸ்கரிக்கிறான்!



அப்பெரியவர் (ஸத்குரு) துணையுடன், அரசுரிமையை ஏற்றான். (அதாவது, ஸத்குரு கிருபையினால், ஜீவன் முக்தி பெற்றுவிட்டான்!) அச்சிறுவன் தனியே இருந்தவன்.

1. A. நாம் அரச குமாரனாக இருந்தும் (ஆத்மாவாக இருந்தும்) எப்படி பிரிக்கப் பட்டோம்???

A. இக்கலி தோஷ குணங்களின் சக்தியில் நாமும் ஜனனம் எடுத்த தன்மையினால், "சகவாஸயின் பழக்க வழக்கத்தால்" வந்த தோஷ குணங்களால், பிரிக்கப்பட்டோம்!

2. B. அரச குடும்பத்தில் (இறை, பர சொரூபத்தில்) பிறந்த நாம், இந்த களவர்களால் (ஸத்வ, ரஜஸ், தமஸ்) எப்படி கவரப்பட்டோம்???

B. நான் என்னால், என்னுடையது, என்ற, அஹங்கார, அபிமானத்தால், வந்த உரிமை, உடமையென்று, சொந்த பந்த பாச உறவுகளை, நம்பி மொத்த "மண், பெண், பொன்" என்ற போதை மயக்கத்தால், கவரப்பட்டோம்!



உ



3. ஃ அம்பெரியவர் (ஸ்ரீ ஸத்குரு) நம்மை மட்டும், எப்படி கண்டு கொண்டார்??

ஃ பயன் கருதாமல் செய்த, பல கோடி ஜன்மாவில், இறைஉணர்வோடு செய்த "புண்ணியம்" தர்மமாக மாறி, அதுவே, அதன் கருணையினால், அம்பெரியவராக (ஸத்குருவாக) வந்தது. அதுவே, இச் "ஜீவசமுத்திரத்திலிருந்து" அறியாமையின், நம்மை பிரித்து கண்டு கொண்டது!

4. D. அவர் பல முறை சந்தித்து, நம்மை நீ வேடுவ சிறுவன் அல்ல, நீ அரச குமாரனே, "நீ அல்ப ஜீவன் அல்ல! நீ ஆத்மாவே" என சொல்லியும், அவைகளை, உணராமல் இருந்தது எது ???

D. குருவையே சந்தேகிக்கும் நிலையாகும். அதாவது, இவர் நம்ம ஊர்க்காரர் தானே? இவர் நம் இனம் தானே? இவர் நம்முடன் படித்தவர் தானே? இவர் ஓர் குடும்பி தானே? என, இன்னமும், பல விதமாக "நாமரூப"த்தால் ஒப்பிட்டு பார்த்தும், உன் வினை, மனம், விதி, இவைகளால் பின்னவிடும் "குணதோஷத்தால்" அவரை சந்தேகிப்பதாகும்! (குற்றம் குறை உணர்வாகும் ஆகவே உணர முடியவில்லை)



உ

(41)

5. E. இந்த வேடர் குல இனத்திற்கு, "தாழ்வான" குண நிலைக்கு நாம் வரக் காரணம் என்ன ??

முன் ஜன்ம E. "வினை"/"மனம்"/"விதி" ஆகும்:

(1) வினை வந்த விதம்:- நான், என்றல், என்னுடையது, என்ற "ஆகாமியத்தால்" வந்ததாகும்!

(2) மனம் வந்த விதம்:- சொந்த, பந்த, பாசமென்னும், "உடமை"யும், "உரிமை"யும், பாராட்டி, இன்பத்தையும், துன்பத்தையும், மாறிமாறி சுவைத்து, அதையே "வாழ்க்கையாக" வந்த அனுபவத்திறல், மனம் வந்ததாகும்!

(3) விதி வந்த விதம்:- இங்கு மனம் இல்லையானால் வினை இல்லை! வினையில்லையானால் மனம் இல்லவே இல்லை! இவ்விரண்டும் இல்லையானால், "விதிக்கு" வேலை இல்லவே இல்லை! ஆகவே இங்கு, பக்தன் இல்லையானால், ஸ்ரீ பகவான் இல்லை யென்பதை விட, ஸ்ரீ பகவானுக்கு "இயக்கம்" இல்லவே இல்லை! அதையே போல் மனதையும், வினையையும் வைத்தே "விதி" விளையாடும்!



உ

46

ஓர் உண்மை யென்ன வென்றால்?
புண்ணியபாபம் என்ற, வினை இல்லையாதல்
அவைகளை, எண்ண வழியில் இயக்கும்,
"மனதிற்கு" வேலையில்லை!
இந்தமனமானது, விதி யென்ற ஸ்ரீபகவானின்
"நிழல்"! என்ற மாயாவின் குழந்தையாகும்!
ஆகவே இங்கு "வினை" ஆடிக் "கழிகின்றது"!
"விதி" வினையைவைத்து, ஆனந்தமாக
"ஆட்டிக் களிக்கின்றது"!!
ஆகவே இங்கு "மனமானது" வினையை,
வைத்துக்கொண்டு, விதியின் சகாயத்தால்,
நான், என்னால், என்னுடையது, என "உண்டு"!,
"களிப்புடன், கழிக்கிறது"!
ஆதலால் "நாம் வினை"யும் அல்ல! நாம் விதி
யும் அல்ல!! நாம் மனம் அல்ல!!! ஆதலால்
"நாம் அதுவே! அதுவே நாம்"! இது ஸத்தியம்!

பாபா.

எல்லாம் ஒன்றே! அது நவமே! அது சிவமே!
அது யாமே! அது நீயே! இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

உ





# (ஓ) "ஓர் உண்மை"!

எம் அன்புமயமான, ஞானக்குழந்தைகளே! நீங்கள்

"**எம் ஞானப் பேரரசின் இளவரசர்கள்**"! ஆகும்! சற்று விளையாடி விட்டு, வாருங்கள் என, உங்கள், எம் மாயாவின் சிருஷ்டியாகிய, உலகிற்கு அனுப்பி வைத்தோம்.

"**வேஷம் போட்டு**"! விளையாட வந்த, நீங்கள். அனைவரும், அப்படியே விளையாட்டில் மயங்கி விட்டீர்களே! "**நான்**" இன்னஜாதி! இன்னமதம்! இந்த குலம்! இந்த கோத்ரம்! இந்த குடும்பம்! இந்த தேசம்! என்னும்; "**என்னுடைய**" குடும்பம்! என்னுடைய அப்பா அம்மா! என்னுடைய தொழில்! என்னுடைய மனைவி! என்னுடைய கணவன்! என்னுடைய குழந்தை! என்று "**உடைமையும்**"! அதிகாரத்தினால், "**உரிமையும்**"! கொண்டாடி; காலத்தினால், வினை, விதி, முடிந்ததை, யாம் ஏற்றுக்கொண்டால், ஆத்திர ஆவேசத்துடனும், சோகம், மோஹம், பயம், துக்கம், கவலை, என்று மூழ்கி விடுகிறீர்களே?



இது என்ன நியாயம்?

இது என்ன வீண் அளீணம்?

பொருள் நஷ்டம்! பொருள் லாபம்!!

"எமக்கு? உங்களுக்கா?" நன்றாக சிந்திப்பீர்?

"விளையாட்டை" முடித்தால், திரும்ப விளையாட வரத் தேவையில்லை! (பிறவி இல்லை)

"மோஹாவேச ஆசையால் விளையாட்டு" தொடர்ந்தால், உங்கள் விளையாட்டை முடிப்பதற்காக, திரும்பவும் வந்தே ஆக வேண்டும்! (பிறவி உண்டு)

விளையாட்டை முடிக்க ஒரே வழி???

"எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!" என்று விளையாட்டை முடிக்கவும்!

எல்லாம் நலமான எண்ணவும். நலமாய் முடியும்!

பாபா.

எல்லாம் ஒன்றே! எல்லாம் நலமே! எல்லாம் சுகமே!
எல்லாம் சிவமே! எல்லாம் யாமே! எல்லாம் நீயே!



# 5 உ சம்ஸார விருக்ஷம்!

இந்த சம்ஸார விருக்ஷத்திற்கு, "வேர்" மேலேயும், கிளை, தழை, இலை, பூ, பிஞ்சு, காய், கனி, என்ற "பலன்" அனைத்தும், "கீழேயும்" உள்ளது! இதை கவனிக்கவும்!

(1) வேர்:— கண், காது, மூக்கு, வாய், இவைகளே வேர் ஆகும்! இதன் மூலமாக, சொந்த பந்த பாச, உறவுகளையும், நாமரூப பொருள், உடைமைகளையும், மற்றும் அனைத்தையும், "என்னுடையது" என்ற பாவனை செய்வது, "உரம்" ஆகும்!

நான் இன்னார்: நான் குடும்பி என்ற ஸம்ஸாரி, நான் ஓர் (ஜாதி மதம்) "மனிதன்" என்ற "பந்த ஜீவன்" என எண்ணி, அறியாமையால் மயங்கும், மயக்க எண்ணமாகிய, "நான்" என்ற பாவனையே "ஜலம்"! ஆகும்! மேலே கூறிய, உரமும் ஜலமும், மேலே கூறிய நான்கு இந்திரியங்கள், வேர் மூலமாக செலுத்தப்படுகிறது! (கண், காது, மூக்கு, வாய்)

இதனாலேயே இம்மரம், செழித்து வளர்கிறது, என உணர்க!

உ



(46)

ஒ "பலன் கீழ்"! கீழே உள்ள

அவைகள் பலன் தருவது, கைகளும் கால்களும், ஆகும்! இவைகள் கொடுக்கல் வாங்குதல் என்ற நிலையில், நாம் சென்றும், பிறர் வந்தும், அவரவர் கர்மாவை, எந்த பாரபட்சமும் தோஷமில்லாமல், விகிதாச்சாரப்படி "திட்டமிட்ட காரியங்கள்" ஒழுங்காக நடைபெறுவதுவே, அவைகளின் பலன் ஆகும்! இந்த நிலையில் "நான்" என்ற "ஜலமும்"! "என்னுடையது" என்ற "உரமும்"! இணைந்து, "என்றால்" முடியும் என்றும், முடிந்தது என்றும், முடிப்பேன் என்றும், உயிர்சக்தி என்ற வாயுவும், பிரவர்த்தி நிலையில், "ஜனனபீஜமாகிய குறியின்" செயல்பாட்டால், பிஞ்சு, காய், கனி, என்ற, புண்ணிய பாவ தாவங்களை, உற்பத்தி செய்து, விடுகின்றன! இது கவனக்குறைவில், தொடர்பாக நடைபெற்று, உலக சுழற்சி, கலியின் வேகத்தில், நல்ல பலன் தருகிறது. என ஸ்ரீமஹான்கள், அனுபவத்தால் சொல்லி வைத்தார்கள். கர்மா ஜன்மாவின் காரியம், கீழே இருப்பதால் பிஞ்சு, காய், கனி என்ற நிலையில், பலன் கீழே இருக்கிறது! இதுவே சம்சார விருக்ஷத்தின், கதை ஆகும்!



இந்த நான் என்ற உரமும், என்னுடையது என்ற (47)

ஜலமும்; என்றால் என்ற உயிர் சக்தியும்;

அவ்விருக்ஷத்திற்கு, எவ்வாறு,

கொண்டு செல்லப்படுகிறது என்றால்?

**மாயாமனம்** என்ற சூட்சுமத்தால்

இயங்கப்படுகிறது. ஆகவே? அந்த சூட்சும மனதை வைத்தே இவ்விருக்ஷத்தை, அழிக்காவன்றி, ஜென்மா தொலையாது! ஓர் அதிசயமான, உண்மை என்னவென்றால்?

இந்த விருக்ஷத்தை, எங்கெங்கே, எத்தனை முறை, எப்படி எப்படியெல்லாம், வெட்டினாலும், உடனே தளிர்த்து விடும்!

தளிர்த்து விடும் :- ஆன்மீக சாதனையில், கோடானு கோடி, மார்க்கம் உண்டு. அவைகளை, சொல்லியும் முடியாது. எழுதியும் முடியாது! கோடானுகோடி, மார்க்கங்களிலும், அவ்விருக்ஷத்தை, அழிக்க முடியாது. அதாவது ஜனன மரண, தொல்லையை அகற்ற முடியாது.

**ஆத்மஞானம்** ஒன்றால் மட்டுமே;

இந்த சம்ஸார விருக்ஷத்தை, அழிக்க முடியும் என, நான்கு யுகங்களிலும், உள்ள ஸ்ரீமஹான்கள் கூறுவர்.

இந்த சம்ஸார விருக்ஷத்தை நான் என்ற ஜலம் விட்டுக் என்றும் என்ற உயிர் சக்தியை பருக்கக்கொண்டும், கொண்டும்; என்னுடையது என்ற உரம் இட்டுக் கொண்டும். அவ்விருக்ஷத்தை, வெட்டவும் முடியாது! அதை வேரோடு கெடுக்கவும் முடியாது! முதலில் அவ்வுரமும், அச்ஜலமும், "**இருவதை நிறுத்த**" வேண்டும்! இறை, குரு, உணர்வின், நம்பிக்கை வேண்டும்! **பின்;**





எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்!
எல்லாம் உன்னுடையதே!!! என்ற
நிலையில், "எல்லாம் நலமே"!
என்ற, பரிபூரணமான, உணர்வுடன் "கலந்த
வெந்நீர்" (கடும் சுடுநீர்) விடவேண்டும்!
"அச்சம்" நீரினால் தான், அம்மரத்தின்,
வேர் அழன்று வெந்து, அதை ஜீரணிக்க முடியாமல்:
"தான் ஜீரணித்து" கெட்டு நாசமடையும்!
ஸ்ரீ வாசிஷ்டத்தில், எம் ஸ்ரீ வசிஷ்டர், ஸ்ரீ ராமனுக்குச்
சொல்லும் போது:- ஹே ராமா! அந்த சம்சார விருக்ஷத்தின்,
கிளையை, வெட்ட முடியாது என்றும்; எத்தனை முறை, எப்படி
வெட்டினாலும், அது துளிர்க்கும் என்றும்; "ஞான
சுடு ஜலம்" விட்டால் தான், அதை வேரோடு
தூரோடு, கெடுக்க முடியும், என்றும் சொன்னார். அந்த
ஞானச் சுடு ஜலமே, சர்வார்ப்பணத்துடன் கூடிய,
எல்லாம் நன்மைக்கே, என்ற ஒரே எண்ணமாகும்!
அது செயல்படாது! ஆனால் அவன் செயல்படுவான்!!
ஆகவே சர்வார்ப்பணத்தால், அவன் ஆகியபின் அது ஆவாயாக!
உன்னால் முடியும். முடியாதது,
இப்பைத்தியம் புலம்பாது!
யாமே அது! அதுவே யாம்! அதுவே நீ இப்பைத்தியம்!

பாபா.



# 6

## "புஷ்ப தேனும்" கிண்ண "தேனும்"

ஓர் தேன் கூட்டில் ஆயிரக் கணக்கான (பல) "தேனீக்கள்" இருந்தன. அவை அனைத்தும், தலைமையான, ராணீ ஈயின் ஆணைக்கு கட்டுப்பட்டே நடந்தன. அதிகாலையில், தேனீக்கள் அனைத்தும், தேன் எடுப்பதற்காக, அழகான புஷ்பங்களை, நாடி தேடிச் செல்லும். ஒவ்வொரு புஷ்பமாக அமர்ந்து, தனக்கு வேண்டிய தேனைக் குடித்து விட்டு மேலும் தன்னால், எவ்வளவு தேனை, சேகரிக்க முடியுமோ, அவ்வளவு தேனை, சேகரித்து தம் கூட்டுக்கு, கொண்டு வந்து, சேகரித்து வைக்கும். அத்தேனீக்கள், எல்லாம், ஒரே "கூட்டுக்குடும்பமாக" வாழ்ந்து வந்தன. தலைமைத் தேனீயான ராணி ஈக்கு கட்டுப்பட்டே, அனைத்தும் இருந்தன.

இந்த "தேனீக்களுக்கு" தெரிந்தது எல்லாம், "அழகான விதவிதமான "புஷ்பங்களும்", அதனுள் இருக்கும், "பனித்துளியுண்டு" இருக்கும், அதிஅதி மதுரமான "தேனுமாகும்". இதனை, கோடானு கோடி மலர்களிலும், அம்மதுர தேன், வந்தவிதமும், அத்தேனீக்களுக்கே, தெரியாது தான். தெரிய மார்க்கமும் இல்லை தான்!



(50)

அப்படி தெரியாமலும், தெரியமார்க்கம் புரியாமலும் போன காரணம்?????

அப் "புஷ்பங்களின் அழகும், மணமும்" அதில் உள்ள "மகரந்தமும்", தனியாகவுள்ள, "தேனும்" ஆகும்! இந்த தேன் வந்த விதமானது, ஓர் பெரிய "கிண்ணம்" உள்ளது! அதன் நிறைய, ததும்ப ததும்ப, "தேன்" நிரம்பியுள்ளது.

அந்தேன் கிண்ணத்தின், தேனிலிருந்தே அனைத்து புஷ்பங்களுக்கும், தேன் வருகிறது என, அனுபவஸ்ரீ மஹான்கள் கூறுவர். இனி கருத்துக்கு வருவோம்!

இது உவமானமாகவும், ஓர் விளக்கமாகவும், சொல்லப்படுகிறதே யன்றி, உண்மையில்லை!!!

நாவாதீத பர சொரூபமே, தேன் நிரம்பிய, தேன் கிண்ணமாகும்! (பிரம்மானந்த சமுத்திரம்)

கோடானு கோடி புஷ்பங்களும், கர்த்தாக்களான, ஈஸ்வராதிகளின், "நாமரூபங்கள்" ஆகும். அக்கர்த்தாக்களின், மஹிமைப் பிரபாவங்களே, அத்



51

தேனீக்களை கவர்ந்து இழுக்கும், “மகரந்தம்” ஆகும்!

அதன் துளியூண்டு இருக்கும் தேன், பரசொரூபே அம்ச “பரமாத்மா” ஆகும்!

தேனீக்கள் அனைத்தும், ஜீவத்தன்மையோடு கூடிய, பந்தப்பட்ட, “ஆத்மா”க்கள் ஆகும்!

“மனம்” வசம் கொண்ட, அஞ்ஞான ஜீவாத்மாக்கள் “அனைத்தும், “பாமரர்கள்” என்ற “ஈக்கள்” (அஞ்ஞானிகள்) ஆகும்!

①. மனம் வசம், அகப்பட்ட நிலையிலும், நாமரூப மயக்கத்திலும் இருக்கும், பாமரர்கள் என்ற ஈக்கள் தான், “கிடைத்தால்” தேன், மற்றும் மதுரமான, தேன் போன்ற இனிப்புகளிலும், அமர்ந்து சுவைக்கும்!

“இயல்பாக” நாற்றம் உள்ள (துணைதேஜஷிகளில்) “ஜக வாசனை பழக்க வழக்கங்களில்” (வார்த்தையிலும் செயலிலும் மயங்கி) அதிகமாக அமர்ந்து சுவைக்கும்! (இது அறியாமையின் தவறுக்குறையாகும்)



பக்குவ ஆன்மாக்கள் என்ற

(உ) நேசிக்கள், பக்தியால் திளைக்கும்,

"பக்தர்கள்" ஆகும்! அவர்கள்,

ஸ்ரீ பகவானுக்கு அனேக "நாமரூபங்கள்" கொடுத்து, அதாவது

வண்ண வண்ண விதவிதமான, அழகும் மணமும்,

நிறைந்த மலர்களை நாடி தேடி ஓடும், "தேனீக்களைப் போல், மகரந்தத்தால், ஈர்க்கப்பட்டு,

அதாவது ஆத்மவிசாரிக்க காரியங்களை, அப்யசமாக

செய்து, "மனதை" கவரும் நிலையிலும், அந்த

ஸ்ரீ பகவானின், திவ்விய நாமமென்னும், "நாம ரஸாம்ருதத்தை"(யை) தேனிலும் அதிமதுரம்!

(அச்சுவையை) "பிரம்மானந்த" சுவையென,

உணராமல், நாமரூபத்தை சுவைத்த தன்மையால்,

அச்சுவையை(யே) "பேரானந்தம்" என்னும், சுவை

யாக உணர்ந்து, அதாவது, பெயரால் கிடைக்கும் நாமா

வால் பெறும் ஆனந்தம் என்றும், பெயருக்கே ஆனந்தமே தவிர

உண்மையில் இல்லையென்பதை உணராமல் மயங்கி அனுபவிப்பது.



(3) (53)

எங்கேயோ, "ஒரு ஞானி"

மட்டும், பூர்வ புண்ணிய அதிர்ஷ்டத்தாலும்,

ஸ்ரீ பகவான் கிருபையாலும், ஸ்ரீ மஹான்களின்

ஆசியாலும், "ஸ்ரீ ஸத்குரு"!

கருணையாலும், அதனுடைய, ஏக்கம் உருக்கம் கொண்ட

சிரத்தை யினாலும், பிரம்மானந்த சமுத்திரமாகிய,

தேன் கிண்ணத்தின், இருப்பை உணர்ந்தது.

அதற்கென, "பக்குவப்படுத்தப்பட்ட"

"பக்குவ ஆன்மாக்களை"! மட்டும்,

அரவணைத்து கொண்டு செல்கிறது!

பக்குவப்படாத ஆன்மாக்களுக்கு, இது ஓர்

"புரியாத புதிராகவே" தோற்றும்!

காரணம்:- பேரானந்தம் என்று சொல்லக் கூடிய,

ஸ்ரீ பகவானின், திவ்விய ரூபமும், நாம ரஸாம்சமும்,

அவற்றுடன் கலந்த, பஜனை, பூஜை அபிஷேகம், ஆராதனை,



ஆரத்தி, நிவேதனம், இவற்றுடன்
கூடிய, அழகுடன் கூடிய அலங்காரமும்;
மந்திரஆர்வமான, பூஜையுடன் கூடிய,
"விழாக்களையும்" கூடிக் கூடிக்
கொண்டாடி; "தேடி, ஓடி, ஆடிப்
பாடிய" நாட்களும், நம்மாயா மனதில்,
அப்படியே, பதிவேடாகிவிட்ட தன்மையிலும்;
பிரம்மானந்தம் எது? பேரானந்தம் எது?? என
பிரித்தறிய முடியவில்லை!
பேரானந்தம் என்றால், "நாமரஸாம்ஸ
த்தில்" பெயராலில் தோன்றிய, ஆனந்தம் ஆகும்!
பிரம்மானந்தம் என்றால், அனைத்து நாமரூப, ஸ்ரீபகவானும்,
அந்தகாலாதீத, மாத்திரங்கள் அன்னியமில்லை யென்றும்,
நாமும்; அதற்கும் மாத்திரமும், அன்னியமில்லை
என, சந்தேகலக்கமற, தெளிந்த உணர்வே பிரம்மா
னந்தமாகும் என, ஸ்ரீ மஹான்களின் அனுபவம் இருக்கிறது!
நாமரஸாம்ஸம் என்ற, "தேன்சுவையும்
ஸ்ரீபகவத் நாமரூப, சௌலப்ய தர்சனமும், அகன்



"பிரேமை" என்ற மனதின், "மயக்க போதையும்"! "லீலா, ஈச" விளையாட்டின் நிமித்தம் அமைக்கப்பட்டிருப்பதால், புஷ்பத்தேனை, விட்டு விட்டு, கிண்ணத் தேனுக்கு போக விடாமல் தடுக்கிறது என்றே சொல்லலாம்! (இது ஸ்ரீபகவத்பிரேமையின் மயக்கம் ஆகும்) மேலும் தேனீக்களைப் போல, "ஊரோடு ஒத்து வாழ்"! என்ற, வாழ்க்கை இயக்கப் பழமொழி போன்று, விதவிதமான, கவர் கவரான மஹிமை, இயக்கம், மயக்கமென்ற "புஷ்பமும் தேனும்" போல், ஸ்ரீபகவானும், அவன் நாமரஸனையிலும் ரஸித்து ரஸித்து, தேடி ஓடி நாடி, ஆடிப்பாடிக் கூத்தாடி கொண்டாடி, "பகவத்பிரேமையில்" ஈடுபடுகிறீர்களோ, "அவன்" உங்களுக்குள் ஆக்கிக் கொண்டு, "உங்களை" அவனுக்குள் ஆக்கிக் கொண்டு, அவனையும், உங்களையும், அதுவாகிய "பரமாக்கி"க் கொண்டாலல்லவோ, ஜீவன் முக்தி பெற முடியும்? அவனை தனியே அநுபவிக்காமல் பரமுக்திதானே கிட்டும்?

அவனே நாம்! நாமே அவன்! அவனும் நாமும் அதுவே என்றறிந்து பெறுக!



(56)

# உ

ஊரோடு ஒத்து வாழ்! என்ற வாக்கிய
மானது, பெரும்பாலும், இக்கலி காலத்தில்,
உறவு, சுற்றம், நட்போடு, இணைந்துபோ!
என்ற கருத்தில், அமைந்தாலும், எம் ஔவை
யின் வாக்குப்படி, "**ஊருடன் பகைக்கின்; வேருடன் கெடும்!**" என்ற
அனுபவ நிலையில், அமைவதால்; (ஊர் உவகை ஜீவனை) பழிக்காதே!
பகைக்காதே! அடக்காதே! என்பதை வலியுறுத்தி
"**அடக்கம் அமரருள்**" உய்க்கும்!
என்ற நிலையில், நாம் அடங்கி நடந்தால், "**நாமே**"
தேவ தெய்வங்கள் ஆகலாம். என சுட்டிக்காட்டுகிறது!
இதன் மூலதனம் "**பொறுமை**" ஆகும்! இந்த
ஒரு பொறுமையாலேயே அனைத்தையும் பெறமுடியும்! என்றும்.
ஆகவே "**அடங்கு! அடங்கு! அடங்கு!**"
"**அடக்காதே! அடக்காதே! அடக்காதே!**" என்றும்
முடிவுரையாக, கூறி இந்த இதனை முடிக்கிறேன்!
எல்லாம் ஒன்றே! எல்லாம் நலமே! எல்லாம் ஆனந்தமே!
எல்லாம் நாமே என, உறுதி செய்தால், கஷ்டம் கவலை பயதுக்கம்!
இல்லவே இல்லை! இல்லவே இல்லை! இல்லவே இல்லை!

பாபா.

அதுவே நாம்! நாமே அது! அதுவே நீங்கள் அனைவரும்!



ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.
"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீ ஸத் குரு திருவடி துணை!"

"நம்பினோர் கெடுவதில்லை!"

ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம், ஓம்!"

"அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம்,"

"அகமே எல்லாம்!"

"ஜெகம்பரமும், ஜீவர்களும்,"

"சிறிதும் இல்லை!"

"தெய்வம் மனுஷ்யாளும்!"

மனித வடிவில் தெய்வம் சேவை பண்ணும்!



"அன்பும்" "அறிவும்" "பணிவும்" "கனிவும்" "நம்பிக்கையும்", "வைராக்கியமும்", கொண்ட எம் "ஆத்மானந்த" குழந்தைகளே!

"அடங்கி" வாழ்தலினால், ஆத்மானந்தம் பெறுவீர்கள், என வாழ்த்திக் கூறி ஆசி வழங்குகிறோம்!

அம்மா! உன், அன்பான தபால் கண்டோம். அதில் உன், இரண்டு கேள்விகளையும், எமது ஐயன் திருடன், "கண்ணனுடன்" உரையாற்றி, தெளிந்தவைகளை, அவன் கூற இப் "பேனா" என்ற கருவி, இயங்குகிறது. தயைசெய்து, இந்த ஏழை பைத்தியத்தை, வெளியுலகிற்கு, காட்டிக் கொடுத்து விடாதே! இது சாஸ்திர வாசனை அறியாதது. தத்துப்பித்தென்று, ஏதோ உளறிக் கொண்டிருக்கிறது. அது உன் போன்ற, பைத்தியங்களுக்குப் பொருந்தும். ஏனைய, சாஸ்திர பண்டிதர்களுக்குப் பொருந்தாது.



உ



வெளியுலகிற்கு, தெரியப்படுத்தி, அவர்களும், இந்த உண்மையை, புரிந்து கொள்ள முடியாமல், சங்கடப்படவேண்டாம், என்ற நல்ல கருத்தில்தான், சொல்கிறோம்.

# "யாம் வேறொன்றையும்"

அறியோம் **"அவன்"** அறிவோம்!

**"அதை"** உணர்வோம்! ஆதலால் ஞானியோரனைவரும், வேதம், வேதாந்தம், சாஸ்திரம், உபநிஷதம், மந்திர ஸ்லோகங்கள், ஆச்சார அனுஷ்டான விதிமுறை கட்டுப்பாடுகள் நிறைந்த **"பண்டிதர்களாகிய"** வித்வான்களாகும்!

**"நான் மறையை"** கற்றவன் வேதியன்!

**"நான் மறையை"** தன்னை உணர்ந்தவன் ஞானி!

என்பது மஹான்களின், சத்திய வாசகம் இருக்கிறது! இனி உன் இருகேள்விகளுக்கும், எமதய்யன்களும் பதில், கருத்துடன் கேட்பீர்களாக!

ஐயா! அம்மா!

உன் கேள்வி:— குழந்தைகள் தூங்கும்போது, சிரிக்கவும், அழுமாதிரியும் பண்ணும், அப்போது அதுகளுக்கு எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்குமோ? அல்லது பூர்வ ஜன்ம வாசனை இருக்குமா?



உ

வைத்தியத்தின் பதில் :– அம்மா!

சுமார் பத்து வருடங்களுக்கு, முன்பெல்லாம், 12 வயதிற்கு மேல்தான், "கர்மாவின் பிரவர்த்தி" வரவு செலவு என்ற நிலையில், ஆரம்பம் ஆகும்! இப்போது 2000ல் இருந்தே 10 வயதுக்குமேல், கர்மாவின் பிரவர்த்தி, வரவு செலவு என்ற நிலையில், ஆரம்பமாகிவிடுகிறது! அதற்கு முன், 3 வயதுக்கு, அப்புறம்தானே, தான்கொண்டு வந்த கர்மா, (ஏற்றுவந்த கர்மா) ஆரம்பமாகும்! ஆனால்? "புதியகர்மா" தொடராது! மேலும், "3" வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், எக்கர்மாவும், உலக வாசனையும், அதை தொடவும் முடியாது தொடவும் கூடாது! இதுவே விதி! இதுவே நியதி!! ஆனால் அக்குழந்தைகள், "மனம்" அற்ற "அறிவு" நேத்திரம், உடையவர்களாக இருப்பதால், அதன் பூர்வ கர்மாவை அனுசரித்து, "தெய்வீக" காட்சி பெற ஏதுவுண்டு! அந்த தெய்வீக காட்சிகள், கிடைக்கும் போது "சிரிக்கவும்"! தெய்வீக காட்சி, மறையும் போது, "அழும்பாவனை"யும் இயல்பாக நடைபெறும்! அந்நிலை, அறியாமையானவர்க்கு, அதுதன்னைப் பார்த்து சிரிக்கிறது என்றும், இவரை காண சகிக்காமல், அழுகிறது என்றும், தம்



மனைமைய கர்மனையிறல், பேசப்படுகிறது!
மேலும் அக்குழந்தையும் அத் "தாயின் ஆகார" தோஷங்களினாலும்.
"பழக்க" (வார்த்தையின் மயக்கம்)
"வழக்க" (செய்கையின் மயக்கம்) தோஷங்களினாலும்.
உறவு, சுற்றம், நட்பு, இவர்களின், ஜக, வாஸ, தோஷ, பழக்க, வழக்கங்களின், "தோஷ" குணங்கள், படிப்படியாக விருத்தியாகி "பூர்வ" கர்மாவும், தற்காலிக சேர்க்கையின் கர்மாவும், இணைந்து "மனம்" என இணைந்து பிரவர்த்தி ஆகிறது! ஆகவே, மனம் என்ற கருமை "பந்த"ப்படுகிறது, அப்புறமே வலுவடைந்து, மேலும் ஆகாமிய மூலம் இணைந்து, "பிறவியின்" இணைப்பாகிறது.

உன் கேள்வி:- பித்ருலோகத்திலிருந்து, பித்ருக்கள் ஆசிர்வதிக்கிறார்கள் என்று, சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறது. மனிதர்கள், தங்கள் புண்ணிய பாபத்திற்குத் தக்கபடி, சொர்க்கமோ, அல்லது அடுத்த பிறவியோ, அல்லது சாதனை செய்து ஜீவன் முக்தியோ, பெற்றுவிடுகிறார்கள், என்பது உண்மையானால்? பித்ருலோகத்திலிருப்பவர்கள் யார்? பித்ருலோகத்தில், நம் மூதாதையர்கள் தான், அங்கு



இறக்கிறார்கள் என்றால்; அவர்கள் எல்லோர்க்குமே, இன்னமும் ஜீவன்முக்தியோ, சொர்க்கலோகமோ, மறுபிறவியோ, இன்னமும் கிடைக்கவில்லையா? இங்கு நாம் செய்யும், சிரார்த்தம் அங்கு, அவர்களுக்கு சேருமா?

ஓர் வைத்தியத்தின் பதில்:- குழந்தாய்!

இது நல்ல கேள்வியே! இதில் இன்னமும் பலருக்கு குழப்பம் நீங்கவில்லை போலும்! இதை நன்கு கவனிக்கவும்! குழந்தாய்!

அனைத்து மனித வர்க்கங்களுக்கும் மட்டும், அவரவர், புண்ணிய பாபத்திற்கேற்ப, சொர்க்கமோ, பதமுக்தி எனச் சொல்லும் கைலாயம், வைகுண்டம், பிரம்மலோகம், மணிக்ரீவம் (அம்பாள் உலகம்) முதலிய "பதமுக்தி"யும் ஆத்ம ஞான விசாரணை செய்து, அது ஆனவர்களுக்கு, பிறவா நிலையாகிய, "ஜீவன் முக்தி"யும், பெற வாய்ப்பு உண்டு. மேலே கூறிய மூன்றிற்கும், தகுதி இல்லாதவர்களுக்கு, அந்தரீக்ஷம், எனச் சொல்லும், "பித்ரு லோகம்" என சொல்லும் ஓர் இளைப்பாறுதல் பண்ணக் கூடிய, ஓர் இடம் உண்டு. என சாஸ்திரங்களும், அதை உணர்ந்த ஸ்ரீமஹான்களும், சொல்லுவார்கள்! ஆனால்???



உ

63

இக்கலியுகத்தில், அதாவது கம்ப்யூட்டர் உலகத்தில் அதாவது "அவசர மான" உலகத்தில், கர்மா வேகமாகவும், உக்ரமாகவும், தோஷமாகவும், இயங்கப்படுவதால், பதமுக்திக்கு எங்கோ ஒன்றிரண்டு போகவாய்ப்பு உண்டு! சொர்க்கத்திற்கு $\frac{10}{100}$ பேர்கள், போக வாய்ப்பு உண்டு! மீதி இருப்பவர்கள், $\frac{90}{100}$ விட்ட வேலையை, (கர்மாவை) தொடர வேண்டிய, "நிர்ப்பந்தம்" ஏற்பட்ட, அவசர காரணத்தினால், "உடனுக்கு டன்!" ஜன்மா எடுக்க வேண்டிய சூழ்நிலை, உருவாகி விட்ட தன்மையினால், "பித்ரு" லோகத்தில், இருக்க இடம் இல்லாமல், போய் விட்டது! மேலும் விளம்பரம், வியாபாரம், ஆடம்பரம் இவைகளில் "எதிர்பார்ப்பு" இல்லாமல், கர்மகர்மத்தை, செய்பவர்களே, பித்ருலோகத்தில் "சிறிது" காலம்



(64)

அவர்களின் கர்ம தர்மத்தை அனுசரித்து
நடப்பதற்கு, வாய்ப்பு உண்டு! அப்படி
"செய்த", அல்லது "செய்யும்",
புண்ணியாத்மாக்களும், மிக மிக மிக மிக
சிலரே. நூறுக்கு பத்துதான் தேறுவாம்!
"அவசரமாக சீக்கிரமாக"!
செய்யவேண்டுமென்ற, உத்வேகத்தால், கலிதோஷம்
"வேகமாக" இயங்கப்படுவதால், பித்ருலோக
த்தில், யாரும் "நிலை" கொள்வதில்லை! ஆகவே,
அப்போதைக்கப்போது கணக்கு முடிக்கப்பட்டு,
"ஜன்மாவுக்கு"! வந்துவிடுகின்றனர்.
ஆகவே, பித்ருலோகம், பெரும்பாலும், "காலி"
யாகவே இருக்கிறதென்பது, காலதேவனின் கணக்கு!
நூறு! இருநூறு, வருடங்களுக்கு முன் மறைந்த, நம்
மூதாதையரும், ஜன்மா எடுத்து விட்டனர் என்றும்;
ஜன்மா எடுக்க, தயார் நிலையில், உள்ளனர் என்றும்;
காலதேவன் கணிப்பு சொல்கிறது! அதன் காரணம்?
"கலியின் வேகச்சுழற்சி"! ஆகும்.



உ

(65)

பித்ருக்களும்! சிரார்த்த பலனும்!!

தானதருமம் செய்து, தெய்வ பக்தியோடு, கூடிய புண்ணியாத்மாக்கள், அடுத்து ஓர் "புனிதபிறவி" எடுக்க வேண்டி, சிலகாலம், ஓய் வெடுக்க இருக்கும், ஓர் உலகமாகும்! தானதருமம் செய்யாமல், தெய்வ பக்தியும் பண்ணாமல், இருக்கும் அபக்குவ ஆத்மாக்களுக்கு, அந்த பித்ருலோகத்தில், இடம் இல்லை! அவர்களின் கர்மாவும், மனமும், எப்படி இருக்கிறதோ, அதேநிலையில், "உடனுக்குடன்" (இக்கலியுகத்தில் மட்டும்) ஜன்மா, எடுத்தே ஆகவேண்டும். அவர்கள் இளைப்பாறவோ, தங்கவோ, வேறு இடம் இல்லை! அந்த ஜன்மா யாதை, மனித இனத்தையும் சேர்த்து, நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன, மற்றும், கிருமி கீடகம்! (கீடகம் கிருமி என்றால், கண்ணுக்குத் தெரியாமல், பறப்பதை கீடகம் என்றும் கண்ணுக்குத் தெரியாமல், ஊர்வதை கிருமி என்றும் சொல்வோம்) மரம், செடி, கொடி, புல், பூண்டு, ஆகிய அனைத்து, "ஜீவர்க்கங்களும்" பொருந்தும்!

மேலே கூறிய, புண்ணியாத்மாக்கள், பித்ருலோகத்தில் இருந்தாலும், வேறு ஜன்மா எடுத்திருந்தாலும், நீங்கள் கொடுக்கும், சிரார்த்த உணவை என்ற,



"அவிஸ்"! அவர்களுக்கு, கண்டிப்பாக, போய்ச் சேரும். இப்படி சேர்க்கும் பணியை, எம் அக்கினி தேவன், ஏற்றுக்கொள்கிறான் என்பதும் ஸத்தியமே. அந்த மறைந்த, முதியோர்களாகிய, "மூதாதைகள்" எனச் சொல்லும், "புண்ணியாத்மாக்களுக்கே"! அவிஸ் சேர வாய்ப்பு உண்டு! ஏனையோருக்கு, சேர வாய்ப்பு இல்லை! மேலும், அப்புண்ணியாத்மாக்களின், "ஏழு சந்ததி" வரை, இதைச் செய்யலாம் என்றும், அது வரையிலும், அவர்கள், வேறு ஜன்மா எடுத்திருந்தாலும், அந்த அவிஸ், அவர்களை, சேர வாய்ப்பு உண்டு என்றும், சொல்லலாம்! அப்படி அவர்கள், அந்த அவிஸை, ஏற்கும், ஓர் பக்குவ "ஜீவாத்மாவாக" இருப்பதால், அவர்களை (அவிஸ்) அது சேர்கிறது எனப், பொருள் கொள்ள வேண்டும்!

குறிப்பு:- அவர்கள் ஜீவ போர்வை கழன்ற, ஓர் புனித "ஆத்மாவாக" அவர்கள் ஆகவில்லை. அவர்களுக்கு, எப்படியும் ஜன்மா உண்டு இது ஸத்தியம்.



உ



இப்பொழுது, அவர்கள் உங்கள் அவிலை ஏற்றுக் கொள்வதால், "மனம்"! படைத்த அவர்கள், உங்களை வாழ்த்தி "ஆசியும்" வழங்கமுடியும்! எந்த ஜன்மாவிலிருந்தாலும் அவர்கள் ஆசி, எப்படி இருக்கும் என்றால்?: —

"மனம்படைத்த ஆசி"??

"தன, தான்ய" விருத்திரஸ்து!

"சந்தான" ,, ,, !

"சௌபாக்ய" ,, ,, !

"சுபகல்யாண" ,, ,, !

என இன்னும் பல சொல்லி, "அஷ்டைஸ்வர்ய" ,, ,, !

என வாழ்த்தமுடியும்! அவர்கள் உங்களை வாழ்த்துதலால், "பக்தியின்" "ஸ்ரீபகவானையும்"! "ஜீவன்முக்தியின்" "ஸ்ரீகுரு" தேவரையும்! உணர்த்தவோ, தரிசிக்கவோ, வைக்கமுடியுமா? (முடியாது) (அவர்கள் ஆசி) அவை "மோஹபோக" காரியங்களாகும்.

அஷ்டைஸ்வர்யமும் போக மோஹமே! அது பிறவியின் வித்தே!



அவை, இஷ்ட (காம்ய) காரியார்த்த சித்தி யோக பலன்களாகும்! ஆனால்?

அவைகளும் ஸ்ரீ மஹான்களால், சொல்லப்பட்டிருக்கிறதே, என்றால்?

"ஞானமருந்து!" நாய் போலும் பேய் போலும், அலைய வேண்டாம் என்ற நல்ல எண்ணத் திறனில் தான் இப்படிப்படியாக, உயர்ந்து உயர் பிறவியும், பந்த முக்தியும், பெறவாய்ப்பு, பெற வேண்டுமென்றும் சொல்லி வைத்தார்கள்! அப்படி சிரார்த்தம், செய்யும் போது, அவர்கள் அந்த, பித்ரு லோகத்தில் இல்லாமல் வேறு ஜன்மா, எடுத்திருந்தாலும், அப்பித்ரு சிரார்த்த காரியமானது, அவர்களுக்கு "மந்திரபூர்வமாக" செய்யப்படுவதால், (மந்திரத்திற்கு அர்த்தம் உண்டு) அவர்களும் சூட்சுமமாகவும், மந்திரங்களும் சூட்சுமமாகவும், நீங்கள் கொடுக்கும், அவிஸ் என்ற அவிர்பாகமும், சூட்சுமமாகவும் இருப்பதால், அது குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட ஜீவாத்மாக்களுக்கு, "போய் சேரும்! போய்ச் சேர" வேண்டும்! இதுவே, எம காலதேவனின், தீர்ப்பும் ஆகும்! மேலே கூறிய, இவை அனைத்தும், "காலத்திற்கு" உட்பட்ட நிகழ்ச்சிகளாகும்! ஆனால் நீங்கள் யார்???



உ

நீங்கள் "**காலாதீதமான வர்கள்**!" இக்காலக்கணக்கெல்லாம், எப்போதோ எங்கோ முடிந்து, எந்த பின்னமும் இன்றி, சுத்தமானவர்களாகும்! சுதந்திர பறவைகளாகும்!

ஜீவன் முக்தர்களான, ஸ்ரீமஹான்கள் அனுபவ வாக்கு, எப்படி ஆணித்தரமாக, அமைகிறது என்றால்?

1. "**சிராத்தகால உணவு**" சிறிதளவு "**ஓர் கவளம்**", "**உண்பவனும்**!!!!!"

2. "**சிறுதெய்வம்**" எனச் சொல்லும்; காவல் தெய்வ, "**வழிபாடு**" செய்பவனும்; அவ் வழிபாட்டின் "**பிரசாதத்தை**"! ஓர் கவளம் ஏற்பவனும், நம்முடைய ஆத்மசாதனையின் பலனை, இழக்க, நேரிடும் என, ஸ்ரீமஹான்கள் அனுபவ வாசகம், இருக்கிறது. "**அனுபவம்**"!

3. ஆனால் இவைகளில் முதிர்ச்சியானவர்களின் நிலை, காட்டாக்கினியில் விழும் பச்சை மரங்களும் எரிந்து சாம்பலாகும்; என சொல்லுவார்கள்! அவர்களுக்கு மேலே கூறிய, எந்த **தோஷமும்**, இல்லவே இல்லை! இது சத்தியம்!





4. அனுபவ முதிர்ச்சியானவர்களுக்கு,
பித்ருலோகமேது? பித்ருக்களேது?
ஸ்ரார்த்தமேது? ஸ்ரார்த்த உணவேது?
சிறு தெய்வம், பெரிய தெய்வமென்று,
பேதமேது? தெய்வங்களேது?

இப்படி எல்லாம் இது ஏது? அது ஏது? என சொல்லி விடலாம்.
அங்கு, சந்தேகத்தால் களங்கமும்! களங்கத்தால்
கலக்கமும்! கலக்கத்தால் பயபீதியும்! பயபீதியால்
ஆழ்ந்த துக்கமும்! ஆழ்ந்த துக்கத்தால்
மீள முடியாத "**மனசஞ்சலமும்**" கொண்டால்
(சர்வ சதா அசைவும் கொண்டால்) இதன் பொறுப்பு:
ஸ்ரீ பகவானும் அல்ல! ஸ்ரீ மஹான்களும் அல்ல!

"**உண்மையே பொறுப்பாகும்!**"
"**நீயும் பொறுப்பல்ல!**" காரணம்?
"**நம் குழந்தையாள்!**" அதன் அம்சமாகும்:

அந்தமாயாமனதை, எல்லாம் நீயே என்றும்,
எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உன்னுடையதே
என்றும், சர்வார்ப்பணமாக, விட்டுவிட்டால், புண்ணிய
பாப வித்தாகிய, ஜனனமரணம் இல்லவே இல்லை! உன்
**நம்பிக்கையே, ஸம்பலமாகும்!!**

எல்லாம் ஒன்றே! அதே நவமே!
அது சுகமே!
அது சிவமே! அது யாமே! அது நீங்களே! இது ஸத்தியம்!!!!

பாபா.



உ

(71)

அஷ்ட ஐஸ்வர்யமும் போஹபோஹமே!!!

எம் ஆனந்தக் குழந்தைகளே! இந்த ஏழை வைத்தியம், எந்த வாசகத்திலும், பொன்னை உயிர் கொல்லி என்றும், செல்வத்திற்கு அதிபதியான, ஸ்ரீ மஹாலக்ஷ்மியை, அதிக இழிவு படுத்தியும், கூறி வருகிறதே; ஆனால் நமக்கோ, இந்த பொன்னும், பணமும், பொருளும், இல்லாமல், இது இல்லாத வாழ்வாக இருந்தாலும், ஸத்திய வாழ்வாக, தோன்றுகிறதே!

"அவர்" நிலைக்கு, "அது" பொருந்தும்!

"நம்நிலைக்கு" எதுவும், பொருந்த மாட்டேன் என்கிறதே என, எண்ணத் தோணத்தான் செய்யும்??

"எல்லாம் அவன் பொருள்!" என்றும்.

"எல்லாம் அவன் செயல்!" என்றும்.

முழுமையாக, உங்கள் பொல்லாத மனதை, நல்ல மனதாக்கிப் பாருங்கள்! அங்கு?

"உங்கள் பொருளேது?"

"உங்கள் செயலேது??"

"உங்களுக்கு" தனியே இருப்புத்தான்

"ஏது?" மேலே சொன்ன மூன்றும், உங்களுக்கு,



"அனுபவம்" ஆகிவிட்டால்,
பொன்பொருள் தனியே இருக்குமா?
அந்த வசூல் மிடுக்கான் தனியே இருப்பானா?
வாழ்க்கை என, எதைச் சொல்ல முடியும்?
இன்பதுன்பம் என்றும், பாப நஷ்டமென்றும்,
புண்ணிய பாபமென்றும், நன்மை தீமை என்றும்,
அந்த "பகுப்புகள்"! எப்படி வர முடியும்?
"ஒன்றுபட்டது" என்ற நிலையில்,
"உடைமையும்"! சொந்தமும், அந்த
நாமரூப வஸ்துக்களில், "உரிமையும்"!
பாராட்டும் போதுதான், அவன் மாயாவும்,
உங்கள் மாயாமனமும், பின்னிப் பிணைந்து,
விளையாடுவதால் "தோற்றம்" வலுவடைகிறது.
அதை கிரஹிக்கும், மனம் "மோஹம்" என்ற
ஆசையின் வெறிக்கு ஆட்பட்டு, அல்லலுறுகிறது.
காட்சியோ, நிகழ்ச்சியோ, எந்த ஓசையோ,



உ



எல்லாம் அவன் பொருளே என்றும்;
எல்லாம் அவன் செயலே என்றும்;
அவனன்றி அணுவும் அசைவதில்லை என்றும்; கொஞ்சம் அடங்கி இருந்து,

"எல்லாம் நலமே"!

என எண்ணினால், அவஸ்யம், எல்லாம் நலமாகவே மாறிவிடும்! மாற்றிவிடுவான்!! மாறியே ஆக வேண்டும்!!! அப்படி ஆகவில்லை என்றால்???

"இறைவன்" இல்லவே இல்லை!!!

இது பிரமாண உண்மையாகும்.

ஆனால் இங்கு, அடக்கம் (அடங்குதல் அல்ல) என்றும்

"பொறுமையே" உங்கள் பங்காகும்!

"நலம்தருவது" அவன் பங்காகும்!!

ஒருபக்கத்தைப் பார்த்தவுடன், ஓடிப் போய் விடுகிறீர்களே! மறுபக்கம் திரும்பும் வரை, சற்று அடங்கி, பொறுமையாக, இருக்க முடியாதா? இந்த அடக்கம், உங்களிடம், இல்லையானால் நீங்கள்

எதைச் சாதிக்கிறீர்கள்????

அனைத்தையும் ஒன்றாய் எண்ணு!
அனைத்தையும் நலமாக எண்ணு!
அவஸ்யம்

நலம் பெறுவாய்!

அது செயல்படாது.
அவன் செயல்படுவான்.
அவனை நம்புவதில்
பின் அது ஆகலாம்.

பாபா.

ஜெயசக்தியம்!

Anbin Kudil

Ellam Nee!